பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 6.00

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 22 திங்கட்கிழமை (08.12.2003) தொலைபேசி - 2223378 ஒலி 354





## இந்தியாவுடன் நட்பை ஏற்படுத்த விரும்புகிறோம்

# அதிகாரமற்ற ரணிலின் அரசுடன் பேசுவதில் அர்த்தம் இல்லை!

## அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் லண்டனில் உரை

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தையில்



இணைந்து கொள்வதானால் பெரும்பான்மை சிங்கள மக்க ளின் ஆணையைப் பெற்ற ஓர் அரசா ங்கத்துடன்தான் பேச வேண்டும். அந்த அரசாங்கத்திற்கு நிர்வாக அதிகாரம் இருக்க வேண்டும். ஆனால் இங்கு சந்திரிகா அம்மையாரால் நிர்வாக அதிகாரம் பறிக்கப்பட்டு விட்டது. இதனால் யாருடன் பேசுவது? என்ற சிக்கல் நிலை எங்களுக்கு தோன்றியு ள்ளது. இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின அரசயல ஆலோசகரும் தத்துவசிரியருமான அன்ரன் பாலசிங்கம் நேற்று லண்டனில் உள்ள எக்செல் மண்டபத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் இலங்கை அரசாங்கம் என்று சொல்லக் கூடியதொரு ஒழுங்கமைவான கட்டமைப்பு இல்லை.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவுக்கு கீழ் உள்ள பாராளு மன்ற ஆட்சி ஒருபுறமும் சந்திரிகா குமாரதுங்காவுக்கு கீழ் உள்ள ஜனாதிபதி ஆட்சி இன்னொரு புறமுமாக ஆட்சிஅதிகாரம் பிளவு பட்டிருக்கிறது.

ஏற்கனவே நாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் பேச்சு வார்த்தையினை ஆரம்பித்தபோது அவருக்கு பெரிய நிர்வாக அதிகாரங்கள் இல்லை என்று எமக்குத் தெரியும். ஆனாலும் பிரதமரின் கட்டுப்பாட்டின் கீழேதான் பாதுகாப்பு, உள்துறை, தொடர் பாடல் ஆகிய மூன்று முக்கிய அமைச்சுக்களும் இருக்கின்றது என்ற நம்பிக்கையில் நாம் இருந தோம். அத்துடன் அவருக்குத்தான் மக்களின் ஆணையும் இருந்தது.

அத்துடன் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் பிரபாகரனும், ரணில் விக்கிரமசிங்காவும் தான் கையெழுத்திட்டார்கள்.

ஆனால் இப்போது பிரதமர் ரணில விக்கிரமசிங்கா 3முக்கிய அமைச்சுக்களையும் பறிகொடுத்து விட்டு வெறுங்கையுடன் இருக்கின் றார். இதனால் பேச்சுவார்தையினை மீள ஆரம்பிக்க முடியாமலும், மக்களுக்கு வழங்கிய உறுதி மொழியை காப்பாற்ற முடியாமலும் பிரதமர் திணறுகிறார்.

இந் நிகழ்வுகளைக் கணகா ணித்துக் கொண்டிருந்த சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணை வழங்கி அந்த

(2ம் பக்கம் பார்க்க)

## வான்தோண்டும் பணியில் படையினர் ஈடுபாடு

(திருநெல்வேலி)

வடமராட்சிப் பகுதியில் வான் தோண்டும் பணிகளில் கடற் தொழிலாளர்கள் ஈடுபடாத தெரியவருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் வடமராட்சிப் பகுதியில் வான் தோண்டுவதற்காக

### ஜனாதிபதியும் — பிரதமரும் இணையவேண்டும்

# பொதுத் தேர்தலை மக்கள் விரும்பவில்லை

## தேசிய சமாதான மன்றம் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**சமாதான முயற்சிகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் இணைந்து முன்னெடுத்துச் செல்வதற்கு இதயசுத்தியுடன் இருவரும் செயற்பட வேண்டும். இவ்வாறு இலங்கைத் தேசிய சமாதான மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.**

தென்னிலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலையை போக்குவதற்கு ஜனாதி சமாதான மன்றம் தனது ஆதர வினைத் தெரிவித்துள்ளதுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரது ங்கா மூன்று அமைச்சுக்களைப்

அந்த அரசாங்கத்திற்கு நிர்வாக அதிகாரம் இருக்க வேண்டும். ஆனால் இங்கு சந்திரிகா அம்மையாரால் நிர்வாக அதிகாரம் பறிக்கப்பட்டு விட்டது. இதனால்

நாள் நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் இலங்கை அரசாங்கம் என்று சொல்லக் கூடியதொரு

## வான்தோண்டும் பணியில் படையினர் ஈடுபாடு

(திருநெல்வேலி)

வடமராட்சிப் பகுதியில் வான் தோண்டும் பணிகளில் கடற்தொழிலாளர்கள் ஈடுபடாத நிலையில் தற்போது படையினர் அப் பணிகளில் ஈடுபட்டுவருவதாக தெரியவருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் வடமராட்சிப் பகுதியில் வான் தோண்டுவதற்காக அனுமதியை இராணுவத்தின் 524வது

(10ம் பக்கம் பார்க்க)

## தேசிய சமாதான மன்றம் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**சமாதான முயற்சிகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் இணைந்து முன்னெடுத்துச் செல்வதற்கு இதயசுத்தியுடன் இருவரும் செயற்பட வேண்டும். இவ்வாறு இலங்கைத் தேசிய சமாதான மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.**

தென்னிலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலையை போக்குவதற்கு ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து செயற்படும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதற்கு இலங்கைத் தேசிய சமாதான மன்றம் தனது ஆதரவினைத் தெரிவித்துள்ளதுடன் மேற்கண்டவாறு கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது.


ஜனாதிபதியும், பிரதமரும் கருத்து வேறுபாடுகளை மறந்து இணைந்து செயற்படுவது குறித்து தேசிய சமாதான மன்றம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுக் கொண்டதை அடுத்து இருவருக்குமிடையே இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்காக அரசினாலும், ஜனாதிபதியினாலும் நியமிக்கப்பட்ட உயர் மட்டக் குழுவினர் தமது செயற்பாடுகளில் முன்னேற்றம் கண்டுவருவது

(10ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மகேஸ்வரன் கீரிமலைக்கு செல்ல படையினர் அனுமதி மறுப்பு

### பதிலடியாக இன்று பலாலிவீதியல் மறியல்



(திருநெல்வேலி)

இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் இன்று பலாலிவீதியால் இராணுவவாகனம் செல்லாதவாறு மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளார்.

அமைச்சர் மகேஸ்வரன் நேற்று மதியம் கீரிமலைக்குச் சென்றபோது படையினர் அவரை அங்கு செல்ல விடாது தடுத்துள்ளனர். இதனையடுத்து அமைச்சருக்கும் படையினருக்குமிடையில் கடுமையான வாக்குவாதம் இடம் பெற்றது.

எனினும் அமைச்சர் கீரிமலைக்குச் செல்வதற்குப் படையினர் அனுமதி வழங்கவில்லை. தான் ஆளும் கட்சியின் அமைச்சர் என்பதைத் தெளிவுபடுத்திய போது.இது எமக்கு கட்டளை அல்லவெனவும், யாழ் மாவட்டக் கட்டளைத் தளபதி சரத் பொன்சேகாவே அமைச்சர் மகேஸ்வரனை உயர் பாதுகாப்பு வலயத்தினுள் செல்ல அனுமதிக்க வேண்டாமென உத்தரவிட்டதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

இதனைக் கண்டித்தே அமைச்சர் மகேஸ்வரன் பலாலி வீதியில் இன்று மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளார். (ந-43)

## மணற்காட்டுப் பகுதிகளில் படையினர் மிதிவெடிகள் புதைப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் படையினரால் மிதிவெடிகள் புதைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் முதல் மிதிவெடிகள் படையினரால் புதைககப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மிதிவெடி புதைக்கப்பட்ட நேற்று முன்தினம் இரண்டு மாடுகள் மிதிவெடியில் சிக்கி இறந்துள்ளன. அதேபோன்று நேற்றைய தினமும் இரண்டு மாடுகள் மிதிவெடியில் சிக்கி இறந்துள்ளன.

பொதுமக்கள் நடமாடும் மேற்படி பகுதிகளில் படையினர் மிதிவெடிகளைப் புதைப்பதனால் உயிராபத்து எதிர்நோக்கப்படுவதுடன் கால்நடைகளும் உயிரிழக்கும் நிலை தோன்றியிருப்பதாக மணற்காட்டு இளைஞர் பொருளாதார அமைப்பு தெரிவித்துள்ளது. அத்துடன் கடற்படையினரின் இந் நடவடிக்கை தொடர்பாக மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது. (த-43)

## மூதூர் நாவலடியில் புலிகள் புதிய பதுங்கு குழிகளை அமைக்கின்றனர்

(மூதூர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மூதூர் நாவலடிப் பகுதியில் புதிதாகப் பதுங்கு குழிகளை அமைத்து வருகின்றனர் என்று மூதூர் பொலிஸார் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே தகவல் தெரிவிக்கையில் மூதூர்ப் பகுதியில் விடுதலைப்புலிகள் புதிதாகப் பதுங்கு குழிகளை அமைத்து வரும் இடங்கள் தொடர்பாக பொலிஸார் கவனமெடுத்து வருகின்றனர்என்றார்.

இதேவேளை இது தொடர்பாக திருகோணமலை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தகவல் தருகையில் புலிகள் புதிதாகப் பதுங்குகுழிகள் அமைத்து வருவதாகப் பொலிஸார் புகார் செய்திருப்பதாகவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்ட இடங்களுக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் உறுப்பினர் இருவர் சென்றுள்ளதாகவும் தெரிவித்தார். (ம)

## சம்பந்தன் எம்.பி நேரில்சென்று பார்வை

(திருகோணமலை)

கிண்ணியாப் பிரதேசத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

இருதரப்பினருக்கிடையே அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் வகையில் கிண்ணியா யாமியத் உலாமா சபையின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பின் போது தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடனும்

(10ம் பக்கம் பார்க்க)

## கிண்ணியா, மூதூர்ப்பகுதியில் பதற்றநிலை தணிவு

(கொழும்பு)

கிண்ணியா, திருகோணமலை, மூதூர் ஆகிய பகுதிகளில் கடந்த காலங்களில் இடம் பெற்றுவந்த அசம்பாவிதங்கள் மற்றும் வன்முறைகள் என்பன தணிந்து அப் பகுதிகள் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளன.

கடந்த வியாழக்கிழமை மாலை கிண்ணியா, ஆலங்கேணி தமிழ் முஸ்லிம் மக்களுக்கு இடையே சமூக உறவை ஏற்படுத்தும் முகமாக ஆலங்கேணி நல்லிணக்கச் சபையின் ஏற்பாட்டில் நல்லிணக்க கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இதன்போது இரு சமூகங்களுக்கும் இடையே சமூக உறவை ஏற்படுத்துவதெனவும் இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து மீண்டும் கூடி ஆராய்வதெனவும் தீர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இங்குள்ள நிலைமைகள் குறித்து நல்லிணக்கக் குழுவின் பிரதிநிதிகள் ஆராய்ந்து வருகின்றனர் இக்கூட்டம் இவ்வார இறுதியில் இடம் பெறவுள்ளது. (தி-61)

## சிறுவிளம்பரம்

### English Classes

தரம் 6 முதல் O/L வரையிலான சகல தரங்களுக்குமான **English Language English Literature** வகுப்புக்கள் 08.12.2003 அன்று ஆரம்பமாகின்றன.தொடர்பு:- கோ.சுப்பிரமணியம் இல.62,பழம்றோட்,. கந்தர்மடம், யாழ்ப்பாணம். (அனுமதிக்கு பெற்றோர் வருகை அவசியம்)
(7822)

### ஆசிரியர் போட்டிப்பரீட்சையில் சித்தி பெற!

''ஆனந்தி வெளியீடுகள்- V.A. சிவராசா எழுதிய பொது அறிவுத்தேடல்- எங்கும் விற்பனையாகின்றது. மற்றும் உளச்சார்பு, மொழித்திறன், பொதறிவு, அடங்கிய தகவல் தடாகம்:- 2004ம் ஆண்டு உங்களுக்கு எப்படி ..? ஜாதகம் கணித்துப்பலாபலன் கேடக, விவாகப் பொருத்தம் பார்க்க பொருத்தமான மணமக்களைத் தேடித்தர அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க உங்கள் எதிர் காலம் பற்றிச் சிந்திக்கும் நேரத்தில் சந்தித்துப் பாருங்கள்' V.A. சிவராசா இலக்கம் 01, பழம் றோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(8008)

### மணமகன் தேவை

பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியைக்கு நட்பு பெற்ற செவ்வாய் 8ல், ரோகிணி நட்சத்திரம், கிரகபாவம் 34: 3.6.70ல் பிறந்த பெண்மணிக்கு (K-பகுதி) ஏற்ற மணமகனைத் தேடுகின்றோம் அரச உத்தியோகம் பார்பபவர் விரும்பத்தக்கது. கடித மூலம் அல்லது நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி V.A. சிவராசா சோதிடர் இல 01, பழம் றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (8010)


### கூட்டம்

(இணுவில்)

உடுவில் கமநலசேவைகள் நிலையத்தின் நிர்வாக சபைக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00மணிக்கு குழுத்தலைவர் செ. இலகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (தி-96)

# அதிகாரமற்ற ரணிலின்...

நோர்வே அரசாங்கமும் இத்தகைய அரசியல் நெருக்கடிக்குள் மாட்டிக் கொள்ளாமல் தப்பி நோர்வேக்கு திரும்பிவிட்டது.

இதனால் இலங்கையின் அரசியல் நெருக்கடி மேலும் அதிகரித்துவிட்டது. இதற்கு எல்லாம் முக்கிய காரணம் சந்திரிகா அம்மையார்தான்.

சந்திரிகா அம்மையார்தான் மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றுள்ளதற்கு இரண்டு காரணங்களை கூறுகிறார். அவற்றில் ஒன்று 'விடுதலைப் புலிகள் பெருந்தொகையில் ஆட்களைச் சேர்த்து ஆயுதங்களை கொள்வனவு செய்து மீண்டும் போருக்கு தயாராகுகின்றார்கள்'.

மற்றையது 'ரணிலின் அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு பெருமளவு சலுகைகளை அள்ளி கொடுக்கின்றது'.

இக்குற்றச்சாட்டுக்களை யெல்லாம் எமது தலைவர் பிரபாகரன் மறுத்துள்ளார். அவரின் மாவீரர் தின உரையில் இதனைத் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

இதேவேளை போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னரும வடக்கு கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக தமிழர் அதிகம் வாழும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் இராணுவத்தினரின் கெடுபிடிகள் குறையவில்லை.

இதனைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பிரதமருக்கு இல்லை. அதனை ஜனாதிபதி சந்திரிகா பறித்துவிட்டார். போர் நிறுத்தப்பட்டதும் தென்னிலங்கையில் பெரும் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. உல்லாசப் பயணிகளின் வரவு அதிகரித்துள்ளது. புனரமைப்பு அபிவிருத்தி வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

ஆனால் வடக்கு கிழக்கு மாகாண மக்கள் படும்துயரம், அதுவும் யாழ்ப்பாண மக்கள் படும் துயரம் சொல்லில் அடங்காது.

இராணுவத்தினரின் அச்சுறுத்தல் மத்தியில் சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாது அகதிகளாக அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

எனவே நாங்கள் நிரந்தரமான தீர்வைத் தரக்கூடிய அரசாங்கத்துடன் தான் பேசவேண்டும். அதற்கு பிரதமர் தலைமையிலான அரசாங்கத்துடன் பேசமுடியாது ஏனெனில் இலங்கையின் அரசியல் யாப்பு நிரந்தர தீர்வுக்கான வழிமுறையைக் காட்டவில்லை. அதற்கு பல கட்டுப்பாடுகளை ஜனாதிபதி போட்டிருக்கின்றார். இதனால் இந்த யாப்பின் அடிப்படையில் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது. இது எமக்கு தெரியும்.பிரதமருக்கும் தெரியும்.

இதனால்தான் நாம் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாகம் வேண்டுமென கேட்டோம்.ஆனால் எதற்கும் பிரதமர் உருப்படியான அதிகாரம் எதுவும் இல்லாத இடைக்கால நிர்வாக சபையை தருவதற்கு இணங்கினார். அதிகாரம் ஏதுவும் இல்லாத உருப்படியற்ற வெறுமையான இடைகால நிர்வாக சபையை நாங்கள் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டோம். அதன் பின்னர் நாங்களே பல சட்ட அறிஞர்களைக் கூட்டி எமது கோரிக்கைகளை சட்டரீதியாக முன்வைத்தோம்.

இதற்கு சிங்கள இனவாதக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன. இது குறித்து பிரசாரங்களையும் மேற்கொண்டு வந்தன. இதற்கு முக்கிய சூத்திரதாரியாக இருந்தவர் முன்னால் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர். இதற்கிடையில் பிரதமா ரணில் விக்கிரமசிங்காவும், சில தந்திரோபாயங்களை கையாளத் தொடங்கி விட்டார். அதாவது சர்வதேச பாதுகாப்பு வலயம் ஒன்றை உருவாக்க திட்டமிடத் தொடங்கி விட்டார். உலக நாடுகளை எமது பிரச்சினைக்குள் தலையிட வைப்பது தான் இதன் நோக்கம். உலக நாடுகள் எமது பிரச்சினையில் அக்கறை செலுத்தி அதன தீர்வுக்கு உதவுவது நல்ல விடயம் அல்லது எமது பிரச்சினை உலக மயமாவதும் நல்ல விடயம் தான். ஆனால் உலக நாடுகள் அதில் தலையிட்டு எமக்கு சில நிபந்தனைகளை விதிப்பதை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதிகளாக அங்ககரித்துள்ளதால் இந்த ஆதிக்க சக்திகள் எம்மை ஒன்றும் செய்துவிட முடியாது.

குறிப்பாக இந்தியா இதை உணர்ந்து கொள்ள வேண்டும். புலிகளுடன் இந்தியா நட்புறவை வளர்க்க வேண்டும் தனது வெளியுறவுக் கொள்கையை மாற்றி புதிய அணுகுமுறையை வகுக்க வேண்டும்.

காலங்காலமாக இந்தியாவை பகைத்துவந்த சிங்கள பேரினவாத சக்திகள் தற்போது இந்தியாவுக்கு நேசக்கரம் நீட்ட ஆரம்பித்து விட்டன. இந்தியாவுடன் நட்புறவை வளர்க்க முயலுகின்றன. இந்தியப் படையை இலங்கைக்கு அழைக்கின்றன. இத்தீய சக்திகள் ஏன் இதனைச் செய்கின்றனர் என்றால் இந்தியாவுக்கும்-விடுதலைப் புலிகளுக்குமிடையில் முரண்பாட்டை வளர்த்து மோத வைப்பதற்கேயாகும்.

ஆனால் இந்த சக்திகளை நம்பி இந்தியா ஈழத் தமிழர்களை பகைக்க கூடாது. நேச சக்தியாக பார்க்க வேண்டும்.நாம் இந்தியாவை எமது சக்தியாக -நேச சக்தியாகவே கருதுகிறோம். அத்துடன் இந்தியாவின் தேசிய நலன்களுக்கோ பிராந்திய நலன்களுக்கோ ஏன் பொருளாதார நலன்களுக்கோ குந்தகம் ஏற்படும் விதத்தில் விடுதலைப் புலிகள் நடந்து கொள்ள மாட்டார்கள் என்பதை இந்தியாவுக்கு மீண்டும் கூறிக் கொள்வதுடன் எமது இந்த அழைப்பை இந்தியா ஏற்றுக் கொண்டு பழையதை மறந்து புதிய யுகத்தில் ஈழத் தமிழர்களுக்கு நேசக்கரம் நீட்டி விடுதலைப் புலிகளுடன் நட்புறவை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன் எனக் கூறினார். (ந-10)

## கோபுரம் அமைப்பு

(காரைநகர்)

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தில் பிரதான இராஜ கோபுரம் உட்பட 4வாசல்களிலும் கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அடியார்களின் நிதி அன்பளிப்புடன் மேற் கொளளப்படும் கோபுர அமைப்பு வேலைகளிற்கு உளளூர் கலைஞர்களுடன இந்திய சிற்பாசாரியார்களும் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

ஆலயத்தில் உள் வீதி வசந்த மண்டபம், தம்ப மண்டபம் உட்பட அனைத்து மண்டபங்களும் நவீன சிற்ப வேலைப்பாடுகளுடன் நிர்மாணிக்கப பட்டு வருன்றன.

இவ் ஆலயத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் பெப்ரவரிமாதம் 1திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-246)

## பாதைப்படகுச்சேவை இடைநிறுத்தம்

(காரைநகர்)

காரைநகர் ஊர்காவற்றுறை பாதைப்படகு சேவை இயந்திரக் கோளாறு காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் ஊர்காவற்றுறைப் பகுதிக்கு செல்லும் பிரதேச ஊழியர்கள் மற்றும வியாபாரிகள் ,நீதிமன்றம், பொலிஸ் நிலையம் என செல்லும் பெருமளவு பயணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

கடந்த காலத்தில் காரைநகர் கடற்படையினரின் பொறுப்பில் இயங்கி வந்த பாதைப்படகு சேவை கடந்த வாரமே வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் பொறுப்பேற்கபபட்ட 3ஆம் நாளில் இருந்தே காரைநகர் ஊர்காவற்றுறை பாதைப்படகு சேவை தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-246)

### தேவாலயம் திறப்பு

(ஏழாலை)

ஏழாலை தெற்கு கொலனி வீதியில உள்ள புதிய சீயோன் தேவாலயம் இன்று முற்பகல் 11.00மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (தி-116)


# சங்குநாதம்

சங்கரியைச் சரிக்கப்படாதபாடு

திருமலையில் தொடரும் தமிழ்-முஸ்லிம் கலவரம்

ஜனாதிபதி -பிரதமர் இணைவு சாத்தியமாகுமா?

இதற்குப் பெயர்தான் வசந்தபுரம்

வியாசரின் பதில்கள்

பொன்.கணேசமூர்த்தியின்
கடிவாளம் இல்லாத கனவு...
(நெடுங்கதை)
மற்றும் பல அம்சங்களுடன்

வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள்
உள்ளங்களில் ஒலிப்பது




விலை ரூபா. 14.00

# சங்குநாதம்

# அஜித்யோகி பணம் கொடுத்தது இந்திய ஜனநாயகத்திற்கு இழுக்கு

## துணைப்பிரதமர் அத்வானி தெரிவிப்பு

(புதுடில்லி)

பாரதீய ஜனதாக் கட்சியை உடைப்பதற்கு அஜித்யோகி பணம் கொடுத்ததாகக் கூறப்படும் சம்பவம் இந்திய ஜனநாயக வரலாற்றிலேயே மிகவும் வெட்கக்கேடான ஒன்று என துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி கூறியுள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர் கட்சிக் காவல் தடுப்புச் சட்டத்தை அமுல்படுத்தவேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டு விட்டது. நாடாளுமன்றத்தில் கட்சிக் காவல தடுப்புச் சட்டத்தைத் திருத்த மசோதா கொண்டு வரப்படவேண்டும்.

கட்சி மாறும் பிரதிநிதி ஒருவரை பதவிநீக்கம் செய்ய மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

சட்டங்களின் பிரகாரம் கட்சியின் மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவான உறுப்பினர்கள் கட்சி மாறினால் மட்டுமே பதவி நீக்கம் செய்யப்படலாம்.

ஒரு அரசியல் சீர்திருத்தமாக சத்தியேஸ்கர் மாநிலத்தில் பாரதீய ஜனதாக்கட்சி அரசு அமையவிடாமல் தடுக்க பதவிவிலகும் முதலமைச்சர் அஜித்யோகி பா.ஜ.க.உறுப்பினர்களுக்கு இலஞ்சம் கொடுக்க முன்வந்ததாகக் குற்றஞ்சாட்டி அதற்கு ஆதாரமான ஒலிநாடாக்களை மத்திய சட்ட அமைச்சர் அருணஜோஷி நேற்று முன்தினம் இரவு ராஜப்பூரில் போட்டுக்காட்டினார்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலஞ்சம் கொடுத்தபோது அஜித்யோகி சோனியா காந்தியின் பெயரைப் பயன்படுத்தினார் என்று கூறப்பட்டிருப்பதை அடுத்து அவர் காங்கிரஸ் கட்சியில் இருந்து நீக்கி வைக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் தமது குரல் பதிவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஒலிநாடா ஒரு மோசடி என்றும் அஜித்யோகி கூறுகிறார். (தி-9)



பாபர் மசூதி இடிக்கப்பட்ட 11 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு அயோத்தியில் இராம ஜென்ம பூமிக்கு அருகே கடந்த சனிக்கிழமை போடப்பட்டிருந்த பலத்த பாதுகாப்பு.



பிரான்ஸின் தென்கிழக்கு பகுதியில் பெய்த மழையினால் அப்பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. இந்த வெள்ளத்தினால் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்துள்ளனர். வெள்ளம் சூழ்ந்த வீட்டில் இருந்து தப்பிக்க வழி தெரியாமல் நிற்கும் குதிரைகள்.

## அமெ. படைகளை பாதுகாக்க புதிய கவச ஆடைகள்

(வாஷிங்டன்)

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆதரவாளர்கள் நடத்தும் திடீர் தாக்குதலில் இருந்து பாதுகாத்துக் கொள்ள அமெரிக்க வீரர்களுக்கு புதிய பாதுகாப்புக் கவச ஆடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒரு வினாடிக்கு 2ஆயிரத்து 750 அடி வேகத்தில் ஏ.கே.47 துப்பாக்கியில் இருந்து குண்டுகள் பாய்ந்தாலும் குண்டு துளைக்காத வகையில் இவ் ஆடைகள் வடிவமைக்கப்பட்டு உள்ளன.

ஒரு பாதுகாப்புக் கவச ஆடையின் விலை 1500 டொலர்கள். இலங்கை ரூபாவில் இந்தக் கவசம் 72ஆயிரம் ரூபாவாகும்.

அத்துடன, கவச வாகனங்களின் உற்பத்தியும் அங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்களை ஒஹையோவைச் சேர்ந்த ஒரு நிறுவனம் மட்டுமே தயாரித்து வருகின்றது.

மாதத்திற்கு 80 கவச வாகனங்களை இந் நிறுவனம் உற்பத்தி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி-9)

## பிரதமர் வாஜ்பாயை சந்திக்க பாக். முன்னாள் பிரதமர் விருப்பம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் நடைபெறவுள்ள சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் செல்லும் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஸ்பாயைச் சந்திப்பதற்கு, பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஷி பூட்டோ விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதற்கு அனுமதியை வழங்க வேண்டும் என்றும் அவர் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தான் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டை பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் பாராட்டியுள்ளார்.

நைஜீரியாவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் போது அவர் இந்தப் பாராட்டினைத் தெரிவித்துள்ளார். (தி-9)

## பொதுநலவாய அமைப்பிலிருந்து பாகிஸ்தான் மீண்டும் நீக்கம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானுக்கு எதிரான தடையை பொதுநலவாய அமைப்பு நீக்காதது குறித்து ஏமாற்றமடைதுள்ளதாக பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் தெரிவித்தார்.

1999 ஆம் ஆண்டில் நவாஸ் ஷெரீப் அரசை இராணுவப் புரட்சி மூலம் அகற்றி ஆட்சியைக் கைப்பற்றினார் அதிபர் முஷாரப்.

இந்த நடவடிக்கை பொதுநலவாய அமைப்பு நாடுகளின் ஜனநாயக நெறிமுறைகளுக்கு விரோதமானது என்று அறிவித்து, பாகிஸ்தானை அதிலிருந்து விலக்கி வைத்தது.

காமன் வெல்த் அமைப்பில் மீண்டும் இடம் பிடிப்போம் என எதிர்பார்த் தோம். ஆனால், அது ஈடேறவில்லை.

பாகிஸ்தான் சனத்தொகை கூடிய பெரிய நாடு. எங்களை மீண்டும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வது பொதுநலவாய அமைப்புக்கு மேலும் வலிமை சேர்க்கும் என்று அதிபர் முஷாரப் மேலும் தெரிவித்தார். (தி-9)



ரஷ்யாவில் ஓடிக் கொண்டிருந்த ரயில் மீது செச்னிய பெண் தீவிரவாதி நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 36 பேர் பலியானதுடன் நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். தாக்குதலுக்கு இலக்கான ரயிலை படத்தில் காணலாம்.

## சார்க் உச்சி மாநாட்டில் பிரதமர் வாஜ்பாய் - முஷாரப் சந்திப்பு இடம் பெறலாம்?

(இஸ்லாமபாத்)

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் சார்க் உச்சி மாநாட்டுக்காக இஸ்லாமபாத் செல்லும் போது. அவருடன் இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படலாம் என்று பாகிஸதான் பிரதம மந்திரி ஜபருல்லாஹான் ஜமாலி எதிர்வு கூறியுள்ளார்.

பல்வேறு விடயங்கள் குறித்து பிரதமர் வாஜ்பாய் ஆக்கபூர்வமான பதில்கள் அளித்து வருவதால் இரு நாடுகளுக்குமிடையிலான காஷ்மீர் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தைகள் நடக்கலாம் என்று பிரதமர் ஜமாலி கூறியதாக பாகிஸ்தானிய நாளேடான ''டாண்'' செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகையில் தமது அரசு ஆக்கபூர்வமான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளதாகவும், இந்தியாவுடனான உறவுகளை இயல்பாக்க விரும்புவதாகவும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(தி-9)

உலக தரிசனம்

## ஹைதராபாத்தில் மோதல் 6பேர் பலி; 24 பேருக்கு காயம்

(ஹைதராபாத்)

இந்திய ஹைதராபாத்தில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் 6பேர் உயிரிழந்துள்ளதோடு 24பேர் காயமடைந்துள்ளனர்.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட 16வது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்ட வேளையிலேயே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

தீவிர போக்குடைய இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே இந்த மோதல் இடம் பெற்றதாக ஹைதராபாத் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மோதலைக் கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கி மற்றும் கண்ணீர்ப் புகைப்பிரயோகங்களை மேற்கொண்டனர். (தி-9)

## அமெ.படை தாக்குதலால் 9 சிறுவர் உட்பட 10பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தெற்குப் பகுதியில் அமெரிக்க கூட்டுப்படையினர் நடத்திய விமானத்தாக்குதலில் 9 சிறுவர்கள் உட்பட 10பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் ஹஷ்மி நகருக்கு அண்மையில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தீவிரவாதிகளைக் குறிவைத்தே தாங்கள் இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும், இதில் தாங்கள் குறிவைத்த தீவிரவாதிகள் இருவர் உயிரிழந்திருப்பதாகவும் அமெரிக்கப் படையினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்தச் சம்பவத்தில் அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தது குறித்து அமெரிக்கா தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது. (தி-9)

## ஈராக்கில் உள்ள அமெ.படைகளுக்கு எதிராக அல்கெய்டா ஆட்சேர்ப்பு

(நியூயோர்க்)

ஈராக்கில் உள்ள அமெரிக்கக் கூட்டணிப் படைகளுக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொள்வதற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து புதிதாக ஆட்களைத் தெரிவு செய்து, ஈராக்கிற்கு அனுப்பும் முயற்சிகளில் அல்கெய்டா தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

அண்மையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அல்கெய்டா ஆதரவாளர்களிடம் நடத்திய விசாரணைகளின் மூலம் இத்தகவல் தெரிய வந்துள்ளதாக ஐரோப்பிய உளவுத்துறை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின், பிரிட்டன், நோர்வே ஆகிய நாடுகளில் அல்கெய்டாவும் அதன் ஆதரவு அமைப்புக்களும் தீவிரமாக ஆட்சேர்ப்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

இந்நாடுகளில் அமெரிக்காவுக்கு எதிரான இளைஞர்களைத் தெரிவு செய்து கூட்டணிப் படைகளுக்கு எதிராக கெரில்லாத் தாக்குதல்களை மேற்கொள்வதற்கு தேவையான பயிற்சிகளை அளித்து, அவர்கள்ளை ஈராககிற்கு அனுப்பி வைக்கவும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கான பயிற்சி, பணம் தேவையான போலி ஆவணங்கள் மற்றும் ஊடுருவுவதற்கான வழிகாட்டுதல் ஆகிய அனைத்துப் பணிகளையும் அல்கெய்டா அமைப்பு மேற்கொண்டு வருகிறது.

ஆட்சேர்ப்புக்கான பிரசாரம் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்காக அல்கெய்டா அமைப்பு இரகசியத் திட்டத்தையும் தயாரித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக இந்த முயற்சிக்கு பேராதரவு கிட்டியுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் முதல் ஐரோப்பா மற்றும் வடக்கு ஆபிரிக்க நாடுகளிலிருந்து ஈராக்கிற்கு ஆள் அனுப்பும் பணி தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

துருக்கி மற்றும் சிரியா எல்லைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே ஈராக்கிற்குச் செல்ல அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அதற்கேற்றால் போல் ஈராக்கில் எளிதாக நுழைவதற்கு இப்பகுதிகளில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-9)



அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணம் அருகே பல ஆண்டுகளுக்கு முன்பு எஸ்.எஸ். ரிபப்ளிக் என்ற கப்பல் மூழ்கியது. கடலில் மூழ்கிய கப்பலை தற்போது ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அந்த கப்பலில் ஏராளமான தங்க நாணயங்கள் உள்ளன. கப்பலில் இருந்து எடுக்கப்பட்ட நாணயத்தில் ஒன்று.

## அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தால் விடுமுறைகளாக அறிவிக்கப்பட்ட நாட்களில் சிகை அலங்கரிப்பு நிலையத்தைத் திறந்தமை மற்றும் சேவைக்கான கட்டணத்தைக் குறைவாக அறவிட்டமை ஆகிய காரணங்களுக்காக சிகை அலங்கரிப்பு நிலைய அங்கத்தவர் ஒருவருக்கு சங்க நிர்வாகம் 2ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

(தி-18)

## கும்பாபிஷேகம்

(தொல்புரம்)

இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்டு பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஆஞ்சநேய சுவாமிக்கு எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

(தி-70)

# இடமாற்ற உத்தரவுகளால் இடர்படும் உத்தியோகத்தர்கள்

(சுதுமலை)

எதிர்வரும் ஜனவரிமாதம் முதல் வடக்கு-கிழக்கு மாகாண அரச அலுவலகங்களில் நடைமுறைப்படுத்த உள்ள இடமாற்றம் தொடர்பாகத் தினமும் பல்வேறு மேன்முறையீட்டுக் கடிதங்கள் கிடைக்கப்பெற்றுவருவதாக மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சின் உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட இடமாறற உத்தரவுகளில் 90வீதத்திற்கு அதிகமானவை அதே மாவட்டத்தில் முன்னர் கடமைபுரிந்த திணைக்களங்களைவிட மாற்றுத் திணைக்களங்களிற்கு இடமாற்றப்பட்டதாகவும், அதே மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்களிற்கு திருப்தியற்ற காரணங்கள் கூறி இடமாற்ற உத்தரவை இரத்துச் செய்யக் கோருவது மன்னிக்க முடியாத செயல் எனவும் அவ்அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும், இடமாற்ற உத்தரவுகள கிடைக்கப்பெற்ற உத்தி யோகத்தர்கள் மீள்பரிசலனை செய்யக் கோரும் விடயங்களிற்கு தகுந்த அத்தாட்சிகள் காரணங்கள் தெரிவிக்கும் நிலையில் மட்டுமே அது பற்றி கருத்தில் எடுக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனைத்தவிர சில அரச உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்படும் இடமாற்ற உத்தரவுகள் மீள் பரிசீலனை கடிதம் எழுதாது விட்டால், மனப்பூர்வமாக விரும்பி இடமாற்றத்தை ஏற்று புதிய நிலையங்களிற்கு மாற்றம் பெற்றுச் செல்லுவதாக நினைக்கக் கூடும் என்பதற்காக மேன்முறையீட்டு கடிதங்கள் அனுப்புவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (தி-252)

# செய்தித் துளிகள்

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தரம்-10,11 ற்கு கடல் உயிரின வளத் தொழில் நுட்பப் பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட சகல ஆசிரியர்களையும் இக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட தமிழர் கல்வி மேம் பாட்டுப் பேரவையின் கடல்வளப் பாட நெறி இணைப்பாளர் கேட்டுள்ளார். (உ-18)

★ ★ ★

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலின் போது மேற்படி பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புகள் தங்கள் பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்களை சமர்ப்பிக்கவுள்ளது.

(தி-75)

## அவசர கலந்துரையாடல

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கான அவசர கலந்துரையாடலொன்று இன்று திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நீராவியடி பிறைறமன் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அடையாளப் போராட்டம் நடாத்துவது சம்பந்தமாக இங்கு கலந்துரையாடவுள்ளதால், உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் மற்றும் உடற்கல்வி மாணவர்கள் அனைவரும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் கேட்டுள்ளார். (தி-18)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(சுதுமலை)

சங்கானைப்பிரதேச செயலகத்தின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப.10.00மணிக்கு பிரதேச செயலர் சி.மோகன்றாஸ் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தின் போது கல்வி, விவசாயம், சுகாதாரம், மின்சாரம், தபால் மற்றும் வீதி திருத்தம் உட்பட பல்வேறு அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளதுடன் அடுத்த ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் குறித்தும் ஆலோசிக்கப்படவுள்ளன. (தி-252)

## கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும்

(ஊர்காவற்றுறை)

யாழ். சமூக செயற்பாட்டு நிறுவனத்தினால் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும் இடம் பெற்றுள்ளது.

கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்களிலும் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் இடம் பெற்ற இக் கருத்தரங்கில் 40க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர். (தி-75)

## கடற்றொழில் குழுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப்பிரதேச கடற்றொழில் குழுக் கூட்டம் எதிர்வரும் 12ஆம திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ள மேற்படி கூட்டம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

(தி-75)

## தேவாரத் திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தால் நடாத்தப்பட்டு வரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் மற்றும் பன்னிரு திருமுறைகள் பாராயணம் ஆகியன இன்று திங்கட்கிழமை காலை 8.00மணிக்கு கொழும்புத்துறையிலுள்ள ஸ்ரீகாயத்திரி பீட கமலா பெண்கள் ஆச்சிரமத்தில் மன்ற உப தலைவர் சைவப் புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளன.

(தி-18)

## பயிற்சி வகுப்புகள்

(தொல்புரம்)

சுழிபுரம் மேற்கு கடற்றொழிலாளர் சங்கத்தின் நிதியுதவியுடன் கலைமகள் சனசமூக நிலையத்தினரால் சுழிபுரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள மாணவர்களின் அறிவை மேம்படுத்தும் வகையில் கல்வி மற்றும் இசை வகுப்புக்கள் சனசமூக நிலைய மண்டபத்தில் காலை, மாலை நேரங்களில் நடாத்தப்பட்டு வருகின்றன. (தி-70)

## கடலரிப்பால் பாதிப்பு

(தொல்புரம்)

சுழிபுரம் மேற்குப் பகுதியிலுள்ள புளியம்துறை கடற்கரைப் பிரதேசம் தற்போது கடல் அரிப்பினால் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றது.

இப்பிரதேசத்தைக் கடல் அரிப்பில் இருந்து பாதுகாக்கவும், அதனைத் தடுப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளுமாறு சுழிபுரம் மேற்கு கடறறொழிலாளர் சங்கம் வலி.மேற்கு பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (தி-70)

# இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் தேசிய ஐக்கியம் கடைப்பிடிக்கவில்லை

## அமைச்சர் கரு ஜெயசூரிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தல் இருந்து தேசிய ஐக்கியம் கடைப்பிடிக்கப்படவில்லை என மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் கருஜெயசூரியா கவலை தெரிவித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட இராமானிய பீடத்தின் அனுநாயக்கர் அதி சங்கைக்குரிய மத்தியஸ்தவல ஸ்ரீ வசந்கிராபியான் நாயக்க தேரரிற்கு நியமனக் கடிதம் கையளிக்கப்பட்ட வைபவம் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டின் தலைவர்கள் பிரிவினைவாதத்தை கைவிட்டு மகா சங்கத்தினரின் ஆலோசனைகளைப் பின்பற்றியிருந்தால், தேசிய ஐக்கியத்தையும், உறுதிப்பாட்டையும் நிலைநாட்டி இருக்கமுடியும் என்றார்.

இதேவேளை, இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய நீதி, நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் டபிள்யூ. ஜே. எம்.லொக்குபண்டார,

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் மக்கள் வழங்கிய ஆணையைப் பயன்படுத்தி நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்க முன்வர வேண்டும்.

அத்துடன், நாட்டின் இரு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசிய முன்னணியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும பெற்றுக்கொண்ட மக்கள் ஆணையை மதித்து செயற்பட வேண்டும்.

அவ்வாறு இரு கட்சிகளும் ஓர் இணக்கப் பாட்டிற்கு வரத் தவறினால், நாட்டில் மீண்டும் யுத்த சூழ்நிலை ஏற்படும் என்றார். (தி-60,10)

# அமர்வுகளிலிருந்து இடைநிறுத்தம்

# பா. உ. மகிந்த சமரவீர ஐ.தே.க. உறுப்பினர் மீது பாய்ச்சல்

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வுகளில் இருந்து தன்னை இடைநிறுத்தும்படி சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா உத்தரவிட்டதன் பின்னணியில் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் செயற்படுகிறார்கள் என பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் மகிந்த சமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கிண்ணியா குழப்பம் தொடர்பான ஒத்திவைப்பு பிரேரணையின் போதே மேற்படி பாராளுமன்ற உறுப்பினரை சபாநாயகர் இடைநிறுத்தினார்.

நாடாளுமன்ற ஒத்திவைப்பு பிரேரணையின் போது எதிர்க்கட்சியினர் உரையாற்ற என கூடுதலாக 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இந் நேரம் போதாது என ஒழுங்குப் பிரச்சினை ஒன்று சபாநாயகருக்கு விடுக்கப்பட்டது.

ஆனால்,அங்கு நிலவிய கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் சபாநாயகருக்கு அது கேட்கவில்லை மாறாக அவரை மதிக்காது நடந்ததாக குற்றம் சாட்டப்பட்டு பாராளுமன்ற அமர்வுகளிலிருந்து என்னை இடைநிறுத்தியுள்ளார்.

அங்கு சபாநாயகரை மதிக்காத செயற்பாடுகளில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களே ஈடுபட்டனர். எதிர்கட்சியினர் அல்ல.

மாறாக நாம் தொடர்ந்தும் அவருக்கு மதிப்பளிப்போம். ஒழுங்குப் பிரச்சினை குறித்து ஒரே நேரத்தில் பலர் கேள்வி எழுப்புவது கஷ்டம் இதனை சபாநாயகரே முன்னர் ஒரு தடவை கூறியிருந்தார்.

இது தொடர்பான ஆதாரங்கள் அனைத்தும் தன்னிடம் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(தி-6)

# பதவிப் போட்டியாலேயே பேச்சுக்கள் இடைநிறுத்தம

## பொறுப்பாளர் துரை தெரிவிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள பதவிப்போட்டி காரணமாக ஐக்கிய தேசிய அரசிற்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத துரதிர்ஷ்டவச நிலை தோன்றியிருக்கின்றது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புத் துறைப் பொறுப்பாளா துரை, லெப்டினன் கேணல் ஜீவனின் 2ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு திகினிவட்டையில் நினைவுத்தூபியொன்றை திறந்துவைத்து பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

சமாதானம் நீடிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் அதனைக் குழப்பாமல் பல்வேறு அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு சமாதானத்திற்காக அரசும், விடுதலைப்புலிகளும் உழைத்து வருகின்றனர்.

இதேவேளை, தற்போதைய சமாதானச் சூழலில் மக்களின் துயர் துடைக்கும் வகையில், சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவியுடன் மக்களை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம்.

அத்துடன், அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கும் உதவி வருகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(தி-61,10)


# யார் இந்த மீனா?

இரவுச்சாப்பாட்டின் போது ராஜுவுக்கு கூடிய அளவு பருப்பும் காய்கறிகளும் கொடுப்பதை மீனா கவனிக்கிறாள். அவனுக்கு விஷேசமாக ஒரு முட்டையும் கொடுக்கப் படுகின்றது. ''ஏன் இந்த பாரபட்சம்?''என்று கேட்டபோது ''இபபடித்தான் எல்லா வீடுகளிலும் செய்கிறார்கள்''என்று தாய் பதலாளிக்கிறாா். தான் கடினமான வேலைகளைச் செய்வதால் தான் இப்படி நடப்பதாக ராஜு நினைக்கின்றான். ''சரி ஒரு நாளைக்கு நான் உன்னுடைய வேலைகளைச் செய் கின்றேன். நீ என்னுடைய வேலையைச் செய்''என மீனா சவால் விடுகின்றாள்.

அடுத்த நாள் ராஜுவின் வேலைகளை மீனாவும் மீனாவின் வேலைகளை ராஜுவும் செய்கின்றனர். இதன் போது மீனா செய்யும வேலைகள் கஷ்டமானதென ராஜுவும் ராஜு செய்யும் வேலைகள் கஷ்டமானதென மீனாவும் உணர்கின்றனர். அன்று இரவு சாப்பிட உட்கார்ந்தபோது ராஜு களைப்பாயும் பசியுடனும் காணப்படுகின்றான்.

மீனாவும் ராஜுவும் வளரும் பிள்ளைகள் ஆதலினால் இருவருக்கும் போதுமான அளவு உணவு தேவை என்பதனை அவர்களின் பெற்றோர் உணர்கின்றனர்.



unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-
அறை எண்30,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(C/6946)

# பிரதமருடன் இணைக்கம் ஏற்படும்

# ஜனாதிபதி சந்திரிகா நம்பிக்கை

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைப்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எனக்கும் இடையில் இணக்கபபாடு ஏற்படா விட்டாலும் இது தொடர்பாக பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய பல விடயங்களில் இணக்கம் ஏற்படும் என்று உறுதியாக நம்புவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக ஜனாதிபதி மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தென்னிலங்கையில் அரசியல் நெருக்கடி தோன்றியபின் இது வரை மூன்று தடவைகள் பிரதமரும் நானும்நேரடியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். இப் பேச்சுவார்த்தைகளின் போது ஒத்துழைப்புடன் செயற்படக்கூடிய விடயங்கள் குறித்து ஆராய்ந்துள்ளோம். தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தவிர்ப்பதற்குக் கூடிய விரைவில் இணக்கப்பாடு ஒன் றுக்கு வருவோம் என்பதில் தான் நம்பிக்கையுடன் இருப்பதாகவும்,

இனப பிரச்சினைக்கு சமாதானம் மூலமே தீர்வு ஏற்படும் என்ற நோக்கில் கடந்த காலத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் இடைநிறுத்தப்படாது மீண்டும் தொடர்வதற்கான நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகிறேன் எனவும தெரிவித்துள்ளார்.

(ம)

## உப-தபால் நிலையம் புனரமைப்பு

(நவாலி)

நீண்டகாலமாக அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் இயங்கி வந்த ஆனைக்கோட்டை உப-தபால் நிலையம் தற்போது தபால் திணைக் களத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

அத்துடன், மேற்படி உப-தபால் நிலையத்திற்கு அருகிலுள்ள தனியாரின் கட்டடங்கள் இரண்டு தபால் நிலையத்தின தேவைக்கென தபால் திணைக்களத்தால் தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

(தி-102)

## தாயகம் திரும்ப விரும்பும் இலங்கையர்க்கு கடவுச் சீட்டு

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாகப் புலம் பெயர்ந்து சென்று இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கையர்கள் தற்போதைய சுமுகமான சூழநிலையை அடுதது மீண்டும் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்கள் இலங்கைக்கு வருவதற்கான கடவுச் சீட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையை அடுத்து தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு இந்திய முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகள் விருப்பம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இவர்கள் தமது தாயகத்திற்குத் திரும்பிச் செல்வதற்கான ஒழுங்குகளையும் கடவுச் சீட்டுகளையும் இந்தியாவுக்கான இலங்கைத் துணைத் தூதுவர் வழங்கி வருகின்றார். இதுவரை மண்டபம் அகதி முகாமிலுள்ள 995 அகதி களுக்கு இக் கடவுச் சீட்டுகள் வழங் கப்பட்டுள்ளன.

அத்துடன் இந்திய அகதிமுகாம்களில் தங்கியிருக்காமல் வெளியிடங்களில் வாழ்ந்துவரும் இலங்கையர்களும் தாயகம் திரும்புவதற்கு விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் அவர்களுக்கும் கடவுச்சீட்டுகள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென இந்தியாவுக்கான இலங்கைத் துணைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

(உ-18)

## ஆஸி.அணி இந்தியாவுடனான முதலாவது டெஸ்ட்போட்டி வலுவான நிலையில்

அவுஸ்திரேலியாவிற்கு கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்குமிடையில் பிரிஸ்பேனில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் 4ஆம் நாள் ஆடட இடைநேரத்திற்கு முன்னதாக இந்திய அணி 3விக்கெற்றை இழந்து 69ஓட்டங்களைத் தனது முதல் இன்னிங்ஸில் பெற்றது. இதில் இந்திய அணிசார்பில் விரேந்தர் சேவாக் 45ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் ஓட்டம் எதுவும் பெறாமலேயே ஆட்டம் இழந்துள்ளார்.

முதலாவது இன்னிஙஸில் அவுஸ்திரேலிய அணிசார்பில் பந்துவீசிய டிலெப்சி இந்திய அணியின் 2விக்கெற்றுக்களைக கைப்பற்றியுள்ளார்.

முன்னர் தனது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக் களையும் இழந்து 323ஓட்டங்களைப் பெற்றது. இதில் அவுஸ்திரேலிய அணிசார்பில் ஜஸ்ரிஃ: லாங்கர் 121 ஓட்டங்களையும் அணித்தலைவர் டிக்கிப் பொண்டிங் 54ஓட்டங்களையும் மத்தியூ ஹேடன் 37 ஓட்டங் களையும் டேமியன் மாட்டின் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணிசார்பில் சகீர்ஹான் 95ஓட்டங்களுக்கு 5விக்கெற்றுக்களையும் அஜித் அஹார்கர் 3விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

இவ் முதலாவது டெஸ் போட்டி மழை காரணமாக தொடர்ந்து பாதித்து வருகிறது. ஆட்டத்தின் முதலாவது நாள் மற்றும் 2வது நாள் மதியத்தில் இருந்து 2மணி நேரமும் 3ஆம் நாள் காலையில் இருந்து நீண்ட நேரமும் போட்டி நேரங்கள் தடைப் பட்டன. இதனால் இப் போட்டியின் முடிவு எட்டப்படுவது கடினமாக இருக்கும என கிரிக்கெற் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(தி-68)

## மினி டெனிஸில் யாழ்.அணி சம்பியன்

அகில இலங்கை ரீதியில் இலங்கை டெனிஸ் சங்கம் நடத்திய மினி டெனிஸ் சுற்றுப்போட்டியில் யாழ்.அணி சம்பியனாகியுள்ளது.

இலங்கை டெனிஸ் சங்க ஆடுகளத்தில் கடந்தவாரம் நடைபெற்ற போட்டியில் குருநாகல் மறறம் இரத்தினபுரி அணிகளை வெற்றி கொண்டு இறுதி ஆட்டத்துக்கு இலங்கை அணி தெரிவானது.

கண்டி மற்றும் மட்டுநகர்களை வெற்றி கொண்டு இரத்தினபுரி அணி யாழ். அணியுடனான இறுதி ஆட்டத்தில் தோல்வியை தழுவியது.

(தி)

## சிறீஸ்ரீஸ்ட்டுக்கு எதிரான போட்டியில் மேற்கிந்திய தீவுகள்அணி 618 ஓட்டங்கள்

தென்னாபிரிக்காவுக்கு கிரிக்கெற் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், சிறீஸ்ரீஸ்ட் பிராந்திய அணிக்குமிடையே புளுபெண்டைமில் நடைபெற்று வரும் 4நாள் பயிற்சிப் போட்டியின் 2ஆம் நாள் ஆட்டநேர முடிவின்போது சிறீஸ்ரீஸ்ட் அணி அதன் முதல் இன்னிங்ஸில் 2விக்கெற்றுககளை இழந்து 3ஓட்டங்களைப் பெற்று இக்கட்டான நிலையில் உள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் அணிசார்பில் பந்துவீசிய டிலான் மற்றும் ரெம்போல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெற்றுக்களைக் கைப்பற்றினர்.

இதற்கு முன்னர் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 618 ஓட்டங்களைப் பெற்றது. இதில் 5வது விக்கெற் இணைப்பாட்டமாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சிவ் நாராயன் சந்திரப்போல் மற்றும் றிஸ்லீ ஜேக்கப் ஆகியோர் 359ஓட்டங்களை பகிர்ந்து கொண்டு சாதனை படைத்துள்ளனர்.

தென்னாபிரிக்காவில் நடைபெறுகின்ற முதல்தரப் போட்டி ஒன்றில் 5வது விக்கெற்றுக்கான அதிகூடிய இணைப்பாட்டமாக இது கருதப்படுகின்றது. இதற்கு முன்னர் 1952மற்றும் 1953ஆம் ஆண்டு கிரிக்கெற பருவகாலத்தில் தென்னாபிரிக்காவின் ரான்ஸ்பெல் பிராந்திய அணிக்காக எரிக்குரோவற் மற்றும் போல்கிப்ஸ் ஆகியோர் 5வது விக்கெற் இணைப் பாட்டமாக 341ஓட்டங்களைப் பகிர்ந்து கொணடமையே சாதனையாக இருந்தது.

இந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணிசார்பில் சிவ் நாராயன் சந்திரப்போல் 245ஓட்டங் களையும், ரீஸ்லீ ஜேக்கப் 149ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். சந்திரப் போல் 361பந்துகளுக்கு முகம் கொடுத்து 39பவுண்டறிகள் அடங்கலாக 245ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார் என்பது இங்கு குறிப் பிடத்தக்கது.

(தி-68)

## விளையாட்டுச் செய்திகள்



பிரிஸ்பேனில் நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டியில் மழை குறுக்கிட்டதால் தார்ப்பாய் கொண்டு மைதானத்தை மூடும் ஊழியர்களையும் இடதுபக்கத்தில் இந்திய அணி கப்டன் கங்குலியையும் படத்தில் காணலாம்.

## இங்கிலாந்து–இலங்கை அணி டெஸ்ட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது

### ரசிகர்களின் பலத்த ஏமாற்றம்

இங்கிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையில் காலி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி காலநிலை சீரின்மை காரணமாக வெற்றிதோல்வியின்றி நிறைவடைந்துள்ளது. இங்கிலாந்து அணியின் சுழறபந்து வீச்சாளர் அஸ்லீ ஹையில்ஸி திறமையான துடுபபாட்டமும், போட்டியின் நிறைவு நாளான நேற்று முன்தினம் நிலவிய சீரற்ற காலநிலையுமேயே போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடையக் காரணமாக இருந்தன.

போட்டியின் நிறைவுநாள் அன்று சீரற்ற காலநிலையால் ஆட்டம் முடிவிற்கு கொண்டுவரப்படும்போது, இங்கிலாந்து அணி அதன் இரண்டாவது இன்னிங்ஸிற்காக 9விக்கெற்றுக்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இங்கிலாந்து அணி சார்பில் துடுப்பெடுத்தாடிய அஸ்லீ ஹையில்ஸி 111பந்துகளுக்கு முகம் கொடுத்து, ஆட்டமிழக்காது 17ஓட்டங்களைப் பெற்றமை சிறப்பம்சமாகும. மேலும் இங்கிலாந்து அணிக்காக இரண்டாவது இன்னிங்ஸில் மார்க்புஸ்சர் 54ஓட்டங்களையும், ஹொலின்வூட் 36ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் இலங்கைஅணி சார்பில் முத்தையா முரளிதரன் 47 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெற்றக்களையும், சமிந்தவாஸ் 23ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெற்றுக்களையும் 2வது இன்னிங்ஸில் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப் போட்டியில் இலங்கை அணி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெறறுக்களையும் இழந்து 331ஓட்டங்களைப் பெற்றது. இதில் இலங்கைஅணி சார்பில் குமாா சங்ககார 71ஓட்டங்களையும், சனத் ஜயசூரிய 48ஓட்டங்களையும், திலான் சமரவீர 45ஓட்டங்களையும் முத்தையா முரளிதரன் 38ஓட்டங்களையும் அணிசார்பில் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் இங்கிலாந்து அணிசார்பில் அஸ்லீ ஹையில்ஸ் 4 விக்கெற்றுக்களையும், அன்ரூ பிளின்ற்ஒவ் 3 விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்து அணி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக் களையும இழந்து 235ஓட்டங்களைப பெற்றது. இதில் அணி வரர்களான மார்க்புஸ்சர் 51ஓட்டங்களையும், கிரேம் தோப் 43ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை அணியின் நட்சத்திரச் சுழறபந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 46ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 7விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணி அதன் 2வது இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக் களையும் இழந்து 226ஓட்டங்களை பெற்றது. இதில் இலங்கை வீரரான மகிழஜெயவாத்தன ஆட்டமிழக்காமல் 86ஓட்டங்களைப் பெற்றார். 2வது இன்னிங்ஸ பந்துவீச்சில் இங்கிலாந்து அணியின் அஸ்லீ ஹையில்ஸ் 63ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4விக்கெற்றுக்களையும், டெறன் பற்றி 55 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3விக்கெற்றக்களையும் கைப்பற்றினர்.

இந்நிலையில் 323ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் தனது 2வது இன்னிங்ஸினைத் தொடர்ந்த இங்கிலாந்து அணி காலைநிலை சீரின்மை காரணமாக போட்டிமுடிவிற்கு கொண்டுவரப்பட்ட போது 9விக்கெற்றுக்களை இழந்து 210ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இப் போட்டியில் இலங்கைஅணியின் நட்சத்திரச் சுழறபந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 2இன்னிங்ஸிலுமாக 11விக்கெற்றுக்களை கைப்பற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ் டெஸ்ட்போட்டியின் போது எதிர்பார்த்ததைப் போல ஒவ்வொரு நாளும் மழையின் குறுக்கீடு காரணமாக ஆட்ட நேரங்கள் பாதிக்கப்பட்டன. இதனால் அவற்றினை ஈடு செய்யும் முகமாக அடுத்தடுத்த நாட்கள் போட்டி நேரத்தை நேர காலத்துடன் ஆரம்பித்து போட்டியினை நடாத்திவந்த போதும், இறுதி நாளும் சீரற்ற காலநிலையினால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. இதனால் இப்போட்டியில் இலங்கை அணியின் வெற்றிவாய்ப்பு நழுவிச் சென்றுள்ளது.

இதற்கு முன்னர் இலங்கைக்கும், இங்கிலாந்து அணிக்கும் இடையிலான 3ஒருநாள் சர்வதேச போட்டிகள் கொண்ட தொடரிலும் 2போட்டிகள் மழை காரணமாக தடைப் பட்டமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

(தி-68)



பிரிஸ்போனில் நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டித்தொடரில் கடந்த சனிக்கிழமை வீசிய முதல் பந்வீச்சிலேயே ஆட்டமிழந்து மைதானத்தை விட்டு வெளியேறுகிறார் மேக்கில் .

# நாளைய உலகின் தலைவிதியை நிர்மாணிப்பது நல்லதோர் குடும்பமே!

நாம் அனைவரும் குடும்பத்தில் பிறந்து குடும்பத்தில் வளர்கிறவர்களே. குடும்பங்கள் மகிழ்ச்சியுள்ளவையாகவும், பாதுகாப்பானவையாகவும் இருக்கின்றன. உடைந்தவையாக அல்லது மகிழ்ச்சியற்றவையாகவும் கூட காணப்படுகின்றன. குழந்தைப் பருவத்தில் நம்மை வளர்த்தெடுத்தவர்கள் தான் நம் குடும்பத்தினர்.

வெற்றிகரமான, மகிழ்ச்சியான திருமண வாழ்விற்கு அதாவது குடும்ப வாழ்விற்குப் பொதுவான சில அடிப்படை ஆதாரங்கள் உண்டு. இவை குறித்தும் இன்றைய குடும்பங்களில் காணப்படும் சிக்கல்களைக் குறித்தும் காண்போம்.

## குடும்பமும் சமுதாயமும்

ஒரு சமுதாயத்தில் காணப்படும் குடும்பங்கள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. காரணம் பெற்றோர்களின் எண்ணங்களும், நடத்தைகளும் மாறுபடுவதே. மணவாழ்வும் குடும்பமும்தான் ஒரு சமுதாயத்தின் மூலைக்கல். ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் திருமண வாழ்வு என்பது ஒரு கோட்டையைப் போன்றது. அப்படிப்பட்ட கோட்டைக்குள் இருந்து வெளியேறவும், வெளியில் இருந்து உள்ளே வரவும் பலர் விரும்பலாம். என்றாலும் மணவாழ்வுதான் சமுதாயத்தில் உயர்வானதாக எல்லோராலும் கருதப்படுகின்றது.

பலர் மண விலக்குச் செய்து கொள்கின்றனர்; இதன் பொருள் மண வாழ்வை அவர்கள் தள்ளி விட்டார்கள் என்பதல்ல! அப்படிப்பட்டவர்கள் திரும்பவும் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறார்கள். இது குறிப்பிடுவது என்னவெனில் மணவாழ்வில் நம்பிக்கையற்றுப் போனதினால் அல்ல; மாறாக துணைவருடன் ஏற்பட்ட மகிழ்ச்சியின்மையே என்பதாகும்.


சிலர் குறிப்பிடுவதுபோல் இளைஞர்கள் மணவாழ்வில் நம்பிக்கை இழந்து அதைத் துறந்துவிடுவதில்லை. திருமணங்கள் ஆயிரம் காலத்துப் பயிராக வளர்ந்து வருவதைக் காண்கின்றோம். இது அடிக்கடி மண விலக்குச் செய்து, மறுமணம் புரிந்துகொள்ளும் மேலை நாட்டினருக்குப் பொருந்தும். மணவிலக்குச் செய்தவர்களில் பலர் மறுமணம் புரியாத நிலையிலும் இன்னொரு வாழ்க்கைத் துணைவருடன் வாழ விரும்புகின்றனர் என்பது ஆய்வுகள் கூறும் செய்தியாகும்.

திருமணம் என்பது சமுதாயத்தின் உணர்ச்சிபூர்வமான நிலையை அளக்கும் வெப்பமானி போன்றது. எனவே, குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையிலான உறவு மிக முக்கியமானது. திருமண வாழ்வு எப்படிப் போகின்றதோ, அப்படியே குடும்பமும் போகின்றது. குடும்பம் போகிற போக்கில் சமூகம் போகின்றது. சமூகம் போகிற போக்கில் நாடு போகிறது! என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

## மாறிவரும் குடும்ப அமைப்புகள்

சமுதாயம் மாறுவதற்கு ஏற்ப மக்களுடைய மனப்பான்மையும் குடும்ப வாழ்வும் மாறி வருகின்றன. ஆயினும், வெகு சிலரே இன்றைய மணவாழ்வு மற்றும் குடும்பப் பிரச்சினைகளை எதிர்கொள்ள ஆயத்தமாக உள்ளனர். எனவே, மண வாழ்க்கை குழந்தைகளை வளர்த்தல் போன்றவற்றிலும் புதிய சூழல்களை இம்மாற்றங்கள் உண்டுபண்ணுகின்றன.

இம்மாற்றங்கள் வாழ்க்கைத் துணைவர்களிடையே போராட்டங்களைத் தோற்றுவிக்கின்றன. வாழ்வில் எழும் சிக்கல்களுக்குத் தக்கபடி குடும்பங்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து நிற்கின்றன. மணவிலக்கு, வாழ்க்கைத் துணைவரின் இறப்பு அல்லது மணவாழ்வுக்கு முன்னரே தாய்மை அடைதலால் தனிமரக் குடும்பங்கள் உருவாகின்றன. இப்படிப்பட்ட குடும்பங்களில் வீட்டுக்குத் தலைமை ஏற்பவள் தாய். குடும்பத்திற்கு வேண்டிய பொருளாதார ஆதாரத்தைத் தேடி வீட்டைத் தலைமையேற்று நடத்தும் பெண்களுக்கு இரட்டைப் பொறுப்பு ஏற்படுகின்றது. இப்படிப்பட்ட நிலையில் ஒற்றைப் பெற்றோரின் மன இறுக்க நிலை குறிப்பிடத்தகுந்தது. இக்காரணத்தால் மண விலக்குவரை செல்லாமல் ஊசலாட்ட நிலையில் உள்ள குடும்பங்கள் ஏராளம். பொருளாதாரச் சுமை, தனிமை, வேலை. பிள்ளைகளின் கவனிப்பு எனப் பெருகும் பொறுப்புக்களே இப்படிப்பட்ட மன இறுக்கநிலைக்குக் காரணம்.



இன்று மக்கள் முன்னைய தலைமுறையினரைப் போலின்றி குறைவாகக்குழந்தை பெற்றுக்கொள்ளத் திட்டமிடுகின்றனர். இந்நிலையிலும் குழந்தையில்லாத பல குடும்பங்கள உள்ளன. இளம் தம்பதிகளில் பலர் பல்வேறு காரணங்களை முன்னிட்டு குழந்தை பெற்றுக்கொள்ள நினைப்பதில்லை. வாழ்வில் முன்னேற்றம் பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பினால் பெருமளவு தடைபடும் என்பது இதற்குரிய காரணமாக உள்ளது. கருத்தடைச் சாதனங்களின் உபயோகம் பரவியுள்ளபடியால் இப்படிப்பட்ட குடும்பங்களும் சமுதாயத்தால் ஏற்கப்பட்டுவருகின்றன.

குடும்பத்தில் ஆண் வெளிவிவகாரங்களை கவனிப்பவனாகவும் முடிவுகள் எடுப்பவனாகவும் பெண் வீட்டுப் பொறுப்புக்களை ஏற்பவளாகவும் வழிவழியாக இருந்து வருகின்றனர். இன்று இந்நிலை மாறி வருகின்றது. இன்று பெண்ணும் முடிவுகளை எடுக்கிறாள். ஆண்கள் குடும்பப் பொறுப்புக்களையும் பிள்ளைகளைப் பற்றிய பொறுப்புக்களை யும் ஏற்கின்றனர். வேலைக்குப் போகும் பெண்கள் பேறு காலம் தவிர மற்றக்காலங்களில் வீட்டுக்கு வெளியே பணிகளைக் கவனிக்கின்றார்கள். எனவே, பெண்களும் ஆண்களும் புதிய பொறுப்புக்களைக் கற்கவேண்டியவர்களாக உள்ளனர்.

மேலை நாடுகளில எல்லாம் மூன்றில் ஒரு திருமணங்கள் மணவிலக்குக்குப் பின் நடைபெறும் திருமணங்களாக உள்ளன. இதனால், எழும் பிரச்சினைகளும் அநேகம். பொருளாதார முன்னேற்றம் நிலையான வாழ்க்கை போன்றவை குடும்ப உறுப்பினர்களிடையே நல்லுறவை நீடிக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் பெற்றோர்களும் பிள்ளைகளும் ஒருவரோடு ஒருவர் எல்லாவற்றிலும் ஒத்துச் செல்லவேண்டியவர்களாகவுள்ளனர். அப்படி முடியாத போது இப்படிப்பட்ட திருமணவாழ்வில் 40 வீதம் அங்கு மீண்டும் மண விலக்கில் முடிவடைகின்றன.

இதுவன்றி மணம் புரியாத நிலையில் சேர்ந்து வாழும் இணைகளும் உண்டு. இப்படிப்பட்ட வாழ்வுகள் மண வாழ்விற்கு மாற்றாக அமைந்தாலும் இப்படிப்பட்ட உறவுகள் பல சமயங்களில் மண வாழ்வில முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கக் கூடியவை.

## மாறிவரும் குடும்ப வாழ்க்கை வட்டம்

மருத்துவவசதிகள் பெருகி வருவதும் குடும்ப வாழ்வைப் பாதிக்கின்றது. கடந்த சில நூற்றாண்டுகளுக்கு முன் மனிதரின் வாழ்நாள் 40 ஆண்டுகளாக இருந்தது. சிலர் மேலும் 20 ஆண்டுகள் வரை வாழ்ந்தனர். இன்று 70 ஆண்டுகள் சராசரி வாழ்நாளாக உள்ளது. எனவே, கணவன் மனைவியாக 50 ஆண்டுகள் வாழமுடிகின்றது. கடந்த நூற்றாண்டுகளில் மணவிலக்குச் செய்யாததை மரணம் செய்தது என்பவரும் உண்டு.

முற்காலத்தில் (இப்போது கிராமங்களில் உள்ளவர்களில் பெரும்பாலோர்) இளவயதிலேயே மணம் புரிந்து பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டனர். சென்ற தலைமுறையினர் 5முதல் 7பிள்ளைகள் வரையும் பெற்றுக்கொண்டனர். இன்று குறைவாகப் பெற்றுக்கொள்கின்றனர். குறிப்பிட்ட காலம் குழந்தை பெறுவதையும் தள்ளிப் போட்டு விடுகின்றனர்.

## மாறும் மனப்பான்மைகளும் மதிப்பீடுகளும்

இன்று சமுதாயச்சிக்கல் நிறைந்ததாகி வருகின்றது. பல கேள்விக் குறிகளும் முரண்பாடுகளும் உண்டு. தனிமனித சுதந்திரம் எங்கும் தலை தூக்கி வருகின்றது என்றாலும் முழு சுதந்திரம் கிடைப்பதில்லை. மனிதர்கள் சமுதாயமாக வாழும் இயல்புடையவர்கள. சமூக உறவுகளில் தான மகிழ்ச்சியும் தன நிறைவும் கிட்டுகின்றன. தனிமனித சுதந்திரத்தை விட சமூகப் பொறுப்பு அதிகம் தலைதூக்குகின்றது.

சமுதாயத்தில் சிக்கல்கள் பல நேருகின்றன. அன்பைப் பற்றி எல்லாரும் தான் கேட்கிறார்கள், பேசுகிறார்கள், படிக்கிறார்கள், பார்க்கிறார்கள் ஆனால், பலரது அனுபவத்தில் அது சுரப்பதில்லை. தொழில்நுட்பம் நமது வேலைகளை விரைவாகச் செய்து முடித்தாலும் குடும்ப சூழலில் இருக்க நேரமில்லை என்று கூறுவோர் உள்ளனர். நமது காலம் தான் முற்காலத்தைவிட குடும்பப் பிரச்சினைகள் மிகுந்த காலம் எனலாம்.

## மாறிவரும்எதிர்பார்ப்புகள்

இன்று பணம், பதவி, அந்தஸ்து, அதிகாரம், பாதுகாப்புக் கருதி செய்யப்படும் திருமணங்கள் இடையே காதல் மணங்களும் பெருகிவருகின்றன. மேலை நாடுகளில் காதல் மணம் மதிக்கப்படுகின்றது. தம் துணையைத் தேடிக்கொள்ள இளைஞர்களுக்கு உரிமை வழங்கப்படுகின்றது. குடும்பத்தின் பொருளாதார, இயல்புத் தேவைகள் மற்றும் பிள்ளை வளர்ப்பிற்காத் திருமணங்கள் திட்டமிடப்படுகின்றன. குடும்பவாழ்வு பாலியல் தேவைகளை நிறைவு செய்யவும்தான் ஏற்படுததப்பட்டுள்ளது. ஆனால், பெண்களின் பாலியல் தேவைகள் பொதுவாக அங்கீகரிக்கப்படுவதோ, நிறைவு செய்யப்படுவதோ மிக அரிதாகவே உள்ளது. இந்நிலையிலும் கூட இன்று தம்பதிகளிடையே எதிர்பார்ப்புகள் மிகுந்துள்ளது. மேற்சொன்ன காரணங்கள் மட்டுமின்றி மனவாஞ்சைகளை நிறைவு செய்வதற்கும் ஓர் உடன் துணைவர் - உணர்வு ரீதியான ஆதரவளிப்பவர் தேவை. இவற்றை நெருக்கமான காதல் உறவுகள் நிறைவுசெய்கின்றன. முற்காலத்தை விட இன்றைய தம்பதிகள் அதிக மனம் விட்டுப் பேசுகின்றனர். இளைஞர்களிடையே தேவையற்ற கட்டுகள் விலகி வருகின்றன. மண விலக்குகள் பெருகி வருவதன் காரணம் மண உறவு தோழமை உடையதாக இல்லை என்பதைக் காட்டுகின்றது.

## மாறிவரும் ஆண் - பெண் பணிகள்

நம் முன்னோர்களிடையே கணவன் வீட்டின் தலைவன் - பாதுகாப்பாளன் - உணவளிப்பவன் - எந்த முடிவையும் செய்பவன் அவனே; மனைவி வீட்டைக் கவனிப்பவள், பிள்ளைகளை கவனிப்பவள் என்ற நிலை இருந்தது; மனைவி பிள்ளைகள் கணவனுக்கு - தகப்பனுக்கு அடங்கி நடந்தனர். பெண்கள் ஒதுக்கப்பட்டனர். பிள்ளைகள் தகப்பனின் சொத்துக்களாக இருந்தனர்.இரு உலகப் போர்களுக்குப் பின் பெண்கள் எப்பணியிலும் ஈடுபடுகின்றனர். பெண்களுக்கு அங்கீகாரம் கிடைத்து வருகின்றது. பெண்களின் உரிமைகளுக்குக் குரல்கள் எழுப்பப்படுகின்றன. இன்று ஆண் - பெண் பேதம இருந்தாலும் சமத்துவதத்திற்கான தடைகள் உடைந்து வருகின்றன. திருமண வாழ்வில் இணைவது என்பது எல்லாப் பொறுப்புக்களையும் கணவன் - மனைவி இருவரும் சமமாகப் பகிர்ந்து கொள்ளவும் உடன் உழைக்கவும் வேண்டும் என்னும் நோக்கம் உடையதே. ஒருவருக்கு ஒருவர் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வது போலவே சுதந்திர மானவர்களாகவும் இருக்கின்றனர். பலரிடம் தகராறு எழுவது இதில் காணப்படும் கருத்து வேறுபாட்டினாலேயே எனலாம்.பெரும்பான்மை ஆண்கள் இன்று வீட்டுக்காரியங்களை மனைவி தலையில் சுமத்தித் திரிபவர்களாகவே உள்ளனர். வெளியில் வேலைசெய்யும் பெண்கள் என்றால் நிலைமை மேலும் மோசம்; வெளி வேலையோடு வீட்டுப் பொறுப்பிலும் பெரும் பங்கு வகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் கணவனின் உதவி (பிள்ளைகளைக் கவனிப்பது உட்பட) எதிலும் கிட்டாத நிலையில் இவர்கள் முழுநேரப் பணியாளர்களாகி விடுகின்றார்கள்; இவ்வித நெருக்கிப் பிழிதலினால் ஊக்கம் இழந்து உடல்நலம் கெட்டு மண உறவிலும் விரிசல் ஏற்படுகின்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர்.

## மணவிலக்கு

அண்மைக் காலம்வரை மணவிலக்கு என்பது கேள்விப்படாத, நினைத்துக் கூடப்பார்க்க இயலாததாக இருந்தது. இன்று ஆண்டுதோறும் மண விலக்குகளின் எண்ணிக்கை உயர்ந்துவருகிறது. (கடந்த 30 ஆண்டுகளில் மேலைநாடுகளில் மண விலக்குகள் 500 வீதத்தில் அதிகரித்துள்ளன. இதுவரை மணவிலக்கு ஏற்புடையதல்ல என்றும், அநியாயமானது என்றும் மனக் கோளாறால் உண்டாக்கப்படுவது என்றும் நினைக்கப்பட்டு வந்தது. ஆனால், இன்றோ,மணவிலக்குக் குறித்து மனப்பான்மை மாறிவருகின்றது. மணவாழ்வில் தீர்க்கமுடியாத பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகளில் மணவிலக்கும் ஒன்றாக ஏற்கப்பட்டு வருகிறது. மணவிலக்கு செய்பவர்களுக்கு வேலையை இழப்போமோ, சமூக மதிப்பு குறைந்து விடுமோ என்ற பயம் இல்லை.

முற்காலத்தில் பெண்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அவ்வளவாக இல்லை. தனியாக குடும்பத்தை தாங்கமுடியாத நிலையில் தனித்துப் பிள்ளைகளை வளர்க்கமுடியாத நிலையில் இருந்தனர். இன்று பொருளாதார உதவிக்கு மற்றவர்களைச் சாராமல் வாழவும் பிள்ளைகளைக் கவனிக்கவும் முடிகின்றது. என்றாலும், மண விலக்குப் பெருகுவது பல புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது.

மண வாழ்வில் முறிவு ஏற்படுவதுதான் உளவியல் ரீதியில் எழும் முதல் பிரச்சினை என உளவியல் அறிஞர்கள் கணிக்கின்றனர். மண விலக்கு அடுத்தவரின் பிடியிலிருந்து விடுதலையைத் தந்தாலும், மிகப் பெரிய மனஉணர்வு சார்ந்த விபத்தாகி விடுகின்றது. இதனால் மன முறிவு, தற்கொலை, போதை மருந்துகளுக்கு அடிமையாகுதல் தனிமை மற்றும் கவலை - ஏக்கம் போன்றவை மணவிலக்குச் செய்தவர்களிடம் அதிக அளவில் காணப்படுகின்றன. மண விலக்குப் பெற்றோர்களின் இருவிரிடையே எழும்பிரச்சினைகளைத் தீர்க்கலாம். - ஆனால், பிள்ளைகளிடையே பெரும் பிரச்சினைகளை உருவாக்கி விடுகின்றது. எப்போதும் சண்டை போட்டு வாதிட்டுக்கொண்டிருக்கும் பெற்றோரிடையே வாழும் பிள்ளைகள் தம் பாதுகாப்பை உணர்வதில்லை. இவ்வாறு தினமும் அனுபவத்தில் காணும் பிள்ளைகளின் உள்ளில் ஆழமான நம்பிக்கையின்மை தோன்றுகின்றது. தாம் நேசிக்கும் பெற்றோரின் இருவரும் ஒருவரையொருவர் வெறுக்கின்றனரே. பெற்றோர்கள் ஒருவரையொருவர் நேசிக்கவேண்டும். என்றே இளம் பிள்ளைகள் விரும்புகின்றனர். ஆனால், அப்படியில்லாத போது தள்ளிவிடப்பட்டவர் களாக, நெருக்கமான பிணைப்புகள தளரும போது கைவிடப்பட்டவர்களாக உணர்கிறார்கள். பிள்ளைகளிடையே பெற்றோர்கள் போட்ட சண்டைகளை நினைவு கூரும் போது. சில சமயங்களில் பிள்ளைகள் தங்களையே குற்றவாளிகளாக உணர்கிறார்கள்.

## பெற்றோர் கடமை

தாய்மார்கள் அதிகளவில் வெளி வேலைகளுக்குச் சென்று சம்பாதிக்கிறார்கள். மருத்துவ வசதி பெருகியுள்ளது. பிள்ளை வளர்ப்பு வசதிகளும் பெருகிவருகின்றது. பெற்றோர்கள் குடும்பத்தோடும் செலவிடும் நேரம் குறைவு. பிள்ளைகளின் வாழ்வில் கூட்டாளிகளின் செல்வாக்கு அதிகமாகுகின்றது. மண விலக்குகளும் பெருகி வருகின்றன.

குடும்பம் என்பது மனிதர்களை உருவாக்கும் தொழிலகமாக ஒப்பிடப்படுகின்றது. குழந்தை ஆரம்பத்தில் பெற்றோர்களால் வளர்க்கப்படுகின்றது; முற்றிலும் அவர்களையே சார்ந்து வாழ்கிறது. குழந்தைமனம் விரிவடையும் காலத்தில் உணர்வுரீதியாக ஆதரவு, குழந்தையின் தேவைகள் யாவும் அளிக்கப்படும் இடம் வீடே. இங்குதான் வாழும் வாழ்க்கைக்கு ஒரு நோக்கம் உண்டு. என்பதை குழந்தை உறுதிப்படுத்திக் கொள்கின்றது. எனவே திருமண உறவு அத்துடன் முடிந்துவிடுவதில்லை. அன்பு, கவனிப்பு பெற்றோர்களின் முன்மாதிரியின்றி மனிதக் குழந்தை முழு வளர்ச்சியடைந்துவிட முடியாது. என்றாலும், திருமணம் பற்றிய இலக்குகள் மாறி வருவதால் பெற்றோரின் பணியும் மாறி வருகின்றது. வழிவழி மதிப்பீடுகள், அடக்குமுறை, பெற்றோர்பணி, தந்தைகளின் பொறுப்பேற்கா செயல்பாடுகள் ஆகியவைகளின் இடத்தைப் பொறுமையாக அனுமதித்தல் பெற்றோர் பொறுப்பைப் பகிர்ந்து கொள்ளுதல் போன்றவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும. □

**இ.பாலகுமாரன்**

# மகாவம்சம்

## தரும் இலங்கை வரலாறு

கலாநிதி க.குணராசா
(செங்கை ஆழியான்)

36

### மகாசேனன்

மகாவம்சத்தின் 37 ஆவது (XXXVII) அதிகாரத்தில் மன்னன் **மகாசேனன** குறித்து வரலாறு தரப்பட்டுள்ளது. ஜெட்டதீசன் மரணமானதும், அவனது இளைய சகோதரனான மகாசேனன் மன்னனாகினான். அவனது ஆட்சி 27 வருடங்கள் நீடித்தது. ஜெட்டதீசன் இறந்த செய்தி அறிந்த மகாசேனனின் குருவான சங்கமித்த தேரர் இலங்கைக்கு வந்து, மகாசேனனின் முடிசூட்டு விழாவை நடாத்தி வைத்தார்.

சங்கமித்த தேரர், மகாசேனனுக்கும் அவனது தமையன் ஜெட்டதீசனுக்கும் இளம் வயதில் ஆசிரியராக விளங்கியவர். அவர் மகாயானப் பிரிவைச் சேர்ந்தவர். தேரவாத பௌத்தபிரிவினரின் மகா விகாரையின் நடவடிக்கைகளைச் சிதைப்பதான காரியங்களைச் செய்தார் என்கிறது மகாவம்சம்.

''அபயகிரி விகாரையைச் சேர்ந்த பிக்குகள், மகாவிகாரை பிக்குகளிலும் பார்க்கக் கட்டுப்பாடும் ஒழுக்கமும் உடையவர்கள்'' என சங்கமித்ததேரர் மன்னனுக்கு இடித்துரைத்தார்.மேலும், ''மகா விகாரையில் வாழ்பவர்கள் (பிக்குகள்) உண்மையான வினயக் கருத்துக்களை போதிப்பவர்களல்லர். நாமே வினயவைச் சரியாக உபதேசிப்பவர்கள்'' எனக் கூறி மகாசேனனை தன்வசமாக்கி, ''மகா விகாரையில் வாழ்கின்ற பிக்கு ஒருவருக்கு எவர் உணவு வழங்குகிறாரோ அவர் நூறு ககவுன் காசுகள் தண்டம் செலுத்த வேண்டியவர்கள்'' என மகாசேனன் மூலம் தண்டம் அறவிடும் கட்டளையைப் பிறப்பித்தான்.

அதனால், மக்களும் மன்னனும் உணவு வழங்காமையால் மகாவிகாரையில் வாழ்ந்த பிக்குகள் மகா விகாரையைக் கைவிட்டு மலைநாட்டிற்கும் உருகுணைக்கும் சென்றனர். ஒன்பதாண்டுகளாக மகாவிகாரை எவரும் சஞ்சரிக்காத இடமாக மாறியது. மதிகெட்ட தேரர் சங்கமித்தரின் கருத்துக்களுக்கு மதிகெட்ட மன்னன் சார்பாகவிருந்து. மகாவிகாரைப் பிக்குகளை வெளியேற்றினான். சங்கமித்த தேரரின் விசுவாசியான மதிகெட்ட மந்திரியும் அரசனின் நம்பிக்கைக்குரிய ஊழியனுமான **சோனாவும**, வெட்கம் கெட்ட சில பிக்குகளும் சேர்ந்து ஏழு அடுக்கு மாளிகையும் மகாவிகாரைக்குரியதுமான லோக பாசாலாவை உடைத்து, அப்பொருட்களை அபயகிரி விகாரைக்கு எடுத்துச் சென்றனர். இவ்வாறாக மகாவிகாரைக்குச் சொந்தமான பல கட்டிடங்கள் உடைக்கப்பட்டன. அபயகிரி விகாரையை இவ்வாறு மகாவிகாரைக் கட்டிடங்களில் கொள்ளையிட்ட பொருட்களைக் கொண்டு அழகுபடுத்தினர். பச்சின தீசபர்வத விகாரையிலிருந்த புத்தரின் பெரும் அரிய சிலையை அகற்றி, அதனை அபயகிரிவிகாரையில் நிறுவினர். அபயகிரிவிகாரைக்காகப் பல புதிய கட்டிடங்களை மகாசேனன் அமைத்துக் கொடுத்தான்.

மகாசேனனின் அமைச்சர்களில் ஒருவனும் நண்பனுமான **மேகவன்ன பயன்,** சங்கமித்த தேரரின் கருத்துப்படி மகா விகாரைக்கு ஏற்படுத்திய அழிவுகளை விரும்பவில்லை. அதனால் அவன் மன்னனுக்கு எதிரான ஒரு கலகக்காரனாக மாறி, மலைநாட்டிற்குச் சென்று படை திரட்டிக்கொண்டு துரைதிஸ்ஸ குளத்தருகில் பாசறை அமைத்துத் தங்கினான். மகாசேனனும் யுத்தத்திற்குத் தயாராகி பாசறை அமைத்துத் தங்கியிருந்த போது, புரட்சியாளன் மேக வண்ணபயன், தன்னந்தனியே வந்து மன்னனைச் சந்தித்தான். ''நீ ஏன் எனக்கு எதிராகக் கலகம் செய்கிறாய்?'' என மன்னன் கேட்க ''நீங்கள் மகா விகாரையை அழித்தமையால் தான்'' என்றான் மேகவண்ணபயன். ''நான் மகாவிகாரையை மீண்டும் பழையபடி கட்டித தருவேன். எனது தவற்றை மன்னித்து விடு'' என்றான். இவ்வாறான சமாதானத்தின் பின்னர், மன்னன் அரண்மனை திரும்பினான். மேகவண்ணபயன் அப்பிரதேசத்திலேயே தங்கி, மகாவிகாரையைத் திருத்திக் கட்டுவதற்கான பொருட்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டான்.

மகாசேனனின் மனைவியரில் ஒருத்தி மகாவிகாரை அழிக்கப்பட்ட விடயத்தில் மிகவும் நொந்து வேதனைக்குட்பட்டாள். அதனால் நம்பிக்கையான பணியாள் ஒருவனை அமர்த்தி, தூபராம தூபியை உடைப்பதற்காக வந்து கொண்டிருந்த அந்த வன்கண் சங்கமித்ததேரரைக் கொல்லுவித்தாள். அவ்வாறே அமைச்சன் சோனாவையும் கொலை செய்வித்தாள். அதன் பின்னர் மேகவண்ணபயன் மகா விகாரையைத் தான் சேகரித்த கட்டிடப்பொருட்களைப் பயன்படுத்தித் திருத்துவித்தான்.

பல பிரிவேனாக் கட்டடங்களையும் அமைப்பித்தான். அதனால் முன்பிருந்த பிக்குகள் மகாவிகாரையில் வந்து மீண்டும் குடியேறத் தொடங்கினர். மன்னனும் பித்தளையால் வடித்த இரு புத்தர் சிலைகளை போதிமரக் கோயிலின் மேற்குப் பக்கத்தில் நிறுவினான். தக்கினராம பிரிவைச் சேர்ந்த நீதியற்ற திஸ்ஸதேரர் என்பான் மகாவிகாரைக்குச் சொந்தமான ஜோதி வனத்தில் **ஜேத்தவனவிகாரையை** மன்னனின் அனுசரணையுடன் கட்டுவித்தான். அதன் பின்னர், ஜேத்தவனவிகாரை எல்லைக்குள் வதியும் மகாவிகாரைப் பிக்குகளை அவ்விடங்களை விட்டு வெளியேறுமாறு கேட்டான். அவர்கள் மீண்டும் மகாவிகாரையைக் கைவிட்டு வெளியேற நேர்ந்தது. ஒரு சில பிக்குகள் மகாவிகாரையின் எஞ்சிய பகுதிகளில் தங்கியிருந்தனர். இந்த நிலையால் மகாவிகாரை மீண்டும் ஒன்பது மாதங்கள் ஆள் நடமாட்டமற்ற பிரதேசமாக மாறியது. பின்னர், இந்தக் கட்டளைக்கு நாம் பணியக் கூடாது என உறுதிபூண்ட மகாவிகாரை பிக்குகள், தமது இருப்பிடங்களுக்கு மீண்டு வந்து குடியேறினர்.

சட்டத்திற்கு மாறாக மகாவிகாரைக்குச் சொந்தமான காணியை அபகரித்து, ஜேத்தவன விகாரையைக் கட்டுவித்த திஸ்ஸதேரருக்கு எதிராக மகாவிகாரைப் பிக்குகள் பிரதம அமைச்சரிடம் முறைப்பாடு செய்தனர். மன்னனின் விருப்பிற்கு மாறாக பிரதம அமைச்சர் விண்ணப்பத்தை விசாரித்து, திஸ்ஸதேரரை ஜேத்தவன விகாரையிலிருந்தும் சங்கத்திலிருந்தும் நீக்கிவிட்டார் என மகாவம்சம் கூறும்.

மகாசேனன், **மணிகிரவிகாரையை** அமைத்தான். அத்தோடு வேறு மூன்று விகாரைகளை அவ்விடங்களிலிருந்து இந்துக் கோயில்களை (பிராமணியக் கடவுளர்) அழித்து விட்டு நிறுவியுள்ளான். கோகர்ணம், **எறக்கவில** ஆகியவிடங்களில் இரு விகாரைகளையும் பிராமணன் **கலந்தனுக்கு** சொந்தமான கிராமத்தில் ஒரு விகாரைகட்டுவித்துள்ளான். இலங்கை எங்கனும் பௌத்த விகாரைகளை அவ்விடங்களிருந்த பௌத்தத்தை நம்பாதவர்களின் கோயில்களைத் தரைமட்டமாக்கி நிறுவியுள்ளான்.



சிவனின் அடையாளங்கள் அனைத்தையும் அவ்விடங்களிருந்து அகற்றினான் என மகாவம்சாதிக்கா கூறும். **களாவெல** இயக்கக் கோயிலை அகற்றி அவ்விடத்தில் தூபி ஒன்றினை ஸ்தாபித்தான்.

பயிர்ச்செய்கை அபிவிருத்திக்காக மகாசேனன், பதினாறு குளங்களைக் கட்டியுள்ளான். மினிஹிர (மின்னேரியா), ஜலூறா, காணு, மகாமணி, கோகவத்தை, தர்மராமா, கும்பலா, வாகனா, இரத்மலகந்தை, திஸவட்ட கமன, வேலன் கவித்தி, மகாகலைசீரா, மகாதரகலை, கால பாசனம், மொறக்கா ஆகிய பதினாறு நீர்ப்பாசனக் குளங்களை கட்டுவித்தான். மகாகங்கையிலிருந்து **பப்பதந்த** என்ற பெரும் கால்வாயையும் வெட்டுவித்தான். மகாசேனன் ஆஸ்திகனாகவும், அதேவேளை நாஸ்திகனாகவும் விளங்கினான் என மகாவம்சம் புலம்பும். மகாசேனன், நற்குணங்கள் வாய்ந்தவனாகவும் அதேவேளை குற்றங்கள் புரிபவனாகவும் விளங்கினான். கெய்கரின் மொழி பெயர்ப்பு மகாவம்சம் குறிப்பிடும்.

(தொடரும்)

---

### ஜே.வி.பி - ஸ்ரீ.சு.க.

# கூட்டமைப்புக் குறித்து கட்சிகளுக்கு விளக்க வேண்டும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் - ஜே.வி.பியிற்கும் இடையே ஏற்படுத்தப்படவிருக்கும் கூட்டுக் குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு மேலும் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என லங்கா சமசமாஜக் கட்சி கேட்டுள்ளது.

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் பட்டி வீரக்கோன் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

இரு கட்சிகளுக்கும் இடையிலான உத்தேச கூட்டமைப்பு நகல் யாப்பு ஒன்று எமக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஆயினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் - ஜே.வி.பியிற்கும் இடையே சில கருத்து வேறுபாடுகள் நிலவிவிருவதால், தேசிய மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் எழும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே ஏற்படுததப்படவிருக்கும் கூட்டுக் குறித்து எமக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்றார்.

(தி-61,10)

# கூட்டமைப்பு - புலிகள் செவ்வாயன்று சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நாளை செவ்வாய்கிழமை காலை கிளிநொச்சியில் உள்ள நடுவப்பணியகத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுககான அழைப்புக் கடிதத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தங்கன் விடுத்துள்ளார்.

இச்சந்திப்பின்போது, தென்பகுதி அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தையின் நிலைப்பாடு, அதன் அடுத்த கட்ட நடவடிக்கை உட்பட பல விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது. (தி-61)

### அமைச்சர் மகேஸ்வரனின் அழைப்பில்

# திருவாவடுதுறை குருமகா சந்நிதானம் மீண்டும் இலங்கை வருகை

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனின் அழைப்பின் பேரில், திருவாவடுதுறை குரு மகா சந்நிதானம் சீர் வளர் சீர் சிவப்பிரகாச் தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் மீண்டும் எதிர்வரும் 13ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் 70 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் அறப்பணி நிலையத்தை எதிர்வரும் 14ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்காகவே தற்போது திருவாவடுதுறை குரு மகாசந்நிதானம் இங்கு வருகை தருகிறார். சுவாமியையும் அவரது குழுவினரையும் சர்வதேச விமான நிலையத்தில் அரச மரியாதையுடன் வரவேற்பதற்கான ஒழுங்குகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்னர் மெய்கண்ட தேவரினால் ஸ்தாபிக்கப்பட்ட திருவாவடுதுறை ஆதீனதத்தின் குரு முதல்வரான இவர், தற்போதைய தனது இவ் விஜயத்தின் போது கொழும்பில் இருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடையவுள்ளதாகவும், இரு தினங்களில் மீண்டும் தமிழ்நாட்டிற்குத் திரும்பிச் செல்லவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இங்கு வருகை தந்த குரு மகாசந்நிதானம் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களுக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள திருத்தலங்களைத் தரிசித்துச் சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (தி-18)

### இலஞ்ச ஊழல்களுக்கு எதிராக

# ஐக்கிய நாடுகள் பிரகடனம் நாளை கைச்சாத்து

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் பிரகடனத்தில் கைச்சாத்திடும் நடவடிக்கை மெக்சிக்கோவில் நாளை செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதனை ஏற்படுத்தவென 129 நாடுகள் கடந்த 3 வருடங்களாக நடவடிக்கை மேற்கொண்டுவந்தன.

இலஞ்ச ஊழலை ஒழிப்பதற்கென சட்டரீதியான சர்வதேச அமைப்பொன்று உருவாக்கப்படவேண்டும். என்பதற்கிணங்கவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப் பிரகடனத்தின் அடிப்படையில் அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் தொழில்நுட்ப உதவி தகவல் பரிமாற்றம் என்பன சம்பந்தமாக உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் இடம்பெறும் இலஞ்ச ஊழல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும்.

ஆனால், இப் பிரகடனம் தயாரிப்பதில் இலங்கை எந்தவித பங்களிப்பையும் செய்யவில்லை என சர்வதேச வெளிப்படை நடவடிக்கை அமைப்பு கருத்துத் தெரிவித்துள்ளது. (தி-61)

# ஆடைத்தொழிற்சாலையில் தையல் இயந்திரங்கள் கொள்ளை

(கொழும்பு)

கம்பஹா வெலிவேரியப் பிரதேசத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் இருந்து சுமார் ஒருகோடி ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்கள் ஆயுத முனையில் கொள்ளையிடப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

மேற்படி ஆடைத் தொழிற்சாலை காவல் கடமைகளில் ஈடுபட்டிருந்த இரு காவலாளிகளை ஆயுததாரிகள் தாக்கிவிட்டு, இறக்குமதி செய்யப்பட்ட நிலையில் அறை ஒன்றில் பூட்டி வைக்கப்பட்டிருந்த புத்தம் புதிய தையல் இயந்திரங்களைக் கொளளையர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை கம்பஹா வெலிவேரியப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.(தி61)

## இன்று ஒரு தகவல்

# விருந்து

பந்திக்கு முந்தும் ஆசாமிகள் நம்மில் பலருண்டு. அப்படி முந்துவது தவறில்லை. ஆனால் அப்படி ஒரு விருந்தில் முதல் ஆளாக உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு வெளியில் வரும் போது ''என்ன பெரிய விருந்து! சாம்பாரில் உப்பு இல்லை. ரசத்தில் புளி இல்லை'' என்று குறை கூறுவது தான் சரியில்லை. நாகரிகமும் இல்லை.

கல்யாண அழைப்பிதழில் என்ன எழுதியிருக்கிறது. ''என் பெண்ணுக்கும் இன்னாரது பையனுக்கும் திருமணம்! எல்லோரும் குடும்பத்துடன் வந்திருந்து மணமக்களை ஆசீர்வதிக்கவேண்டும்'' என்றுதான் போட்டிருக்கின்றது. ''குடும்பத்தோடு வந்து விருந்து சாப்பிட்டுவிட்டு சாப்பாடு எப்படி என்று அபிப்பிராயம் கூறிவிட்டுப்போங்கள்'' என்றா போட்டிருக்கின்றது?

ஒருவர் வீட்டு விசேஷத்திற்குச் சென்றால் அங்கு எமக்கு எவ்வளவோ அசௌகரியங்கள் ஏற்படலாம். ஏராளமான கூட்டம் வந்திருக்கும். எல்லோரையும் தனித்தனியாக கவனிக்க முடியாது. நாம்தான் அனுசரித்துப்போகவேண்டும். வாழ்த்தவேண்டியவர்களை வாழ்த்திவிட்டு வந்துசேர வேண்டும்.

அதைவிட்டுவிட்டு ''பத்திரிகை கொடுத்தான் என்பதற்காகப் போனேன். கவனிப்பே சரியில்லை சார் என்று புலம்பக் கூடாது. ஒரு விருந்துக்குப் போனால் அங்கே எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று அனுபவசாலிகள் சில அறிவுரைகளைக் கூறியிருக்கின்றனர். இந்தக் காலத்தில் திருமணம், பிறந்தநாள் எனப் பல விருந்துகள் நடைபெறுகின்றன. அவையெல்லாம் எதற்காக மனித உறவுகளை வளர்ப்பதற்காக.

ஒரு விருந்துக்குப் போனால் அமைதியாக பொறுமையாகப் போய் உட்காரவேண்டும். அடித்துப்பிடித்து முதல் இடத்தைப் பிடிக்கப் போகின்றேன் என்று நிற்கக்கூடாது. முதல் பந்தி நடந்துகொண்டிருந்தால் அது முடிந்து இலை எடுத்துச் சுத்தம் செய்த பின்பு உட்காருவதுதான் நாகரிகம்.

இலை எடுப்பதற்கு முன்பே அங்கு போய் அமர்வது நாகரிகம் இல்லை. சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்திருக்கிறீர்களா? சாப்பிட உட்கார்ந்திருக்கின்றீர்களா? என்று சந்தேகம் வந்து விடும். அதேபோல் இலையில் எல்லா வகையும் பரிமாறப்பட்ட பின் சாப்பிட ஆரம்பிக்கவேண்டும்.

சாப்பிடும்போது உங்கள் சாப்பாட்டையே நீங்கள் கவனிக்க வேண்டும். அடுத்தவரது இலையில் என்ன இருக்கிறது. பக்கத்தில் இருப்பவர் என்ன விரும்பி உண்கிறார். என்பதெல்லாம் நமக்கு வேண்டாம்.

எல்லோரும் சாப்பிட்டு முடிக்கும் வரை பொறுமையாக இருப்பது தான் நல்லது. நீங்கள் மட்டும் திடீரென்று பாதியில் எழுந்தால் பக்கத்தில் இருப்போருக்கு அது சங்கடமாக இருக்கும். பக்கத்தில் இருப்பவர்கள் உங்களை எழுந்து போகச்சொன்னால் மட்டும் எழுந்து செல்லுங்கள். விருந்துகளில் உணவை வீணாக்குவது இப்போது ஒரு நாகரிகமாகி விட்டது. உணவுக்குப் பலர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது உணவை வீணாக்குவது எவ்வளவு பெரிய தவறு என்பதை நினைத்துப்பார்க்கவேண்டும். வேண்டுமான அளவு கேட்டு வாங்கி உண்பது தான் சரி.

விருந்தில் ப..பே என்று ஒரு முறை. அதாவது உணவு வகைகளை பொதுவாக ஒரு இடத்தில் வைத்து விடுவார்கள். நமக்குத்தேவையானதை நாமே எடுத்து உண்ணலாம். இதிலும் சிலர் அதிகமாக எடுத்து வீணாக்கி விடுவார்கள். இந்தக்கொடுமையை எங்கே போய்ச் சொல்வது?

சில சமயம் இறுதியாகச் சாப்பிடுபவர்களுக்கு எல்லா வகை உணவும் கிடைக்காமல் போகலாம். அதைப் பெரிது படுத்தக்கூடாது. ''என்ன சார் இந்த அளவு கூடவா நாகரிகம் தெரியாமல் இருக்கின்றோம். இதைப்போய் பெரிதாகக் கூற வந்து விட்டீர்களே'' என்று நினைக்கலாம். சிலருக்கு இந்த விடயம் தேவைப்படலாம். அதற்குத்தான் கூறினேன்.

ஒரு பெரிய கல்யாண விருந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. விருந்து மண்டபத்தின் வாசலில் நின்று கொண்டு வருபவர்களை மரியாதையாக வணங்கி உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார். எப்படித் தெரியுமா? வருபவர்களின் கையைப் பிடித்துமுத்தம் கொடுத்து உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தார்.விருந்து முடிந்த பின் அவரிடம் போனேன்.

''சார்! நானும் எவ்வளவோ விருந்துகளுக்குப் போயிருக்கிறேன். இருந்தாலும் இவ்வளவு மரியாதையாக வருபவர் கைக்கு முத்தம் கொடுத்து வரவேற்பதை நான் இங்கே தான் பார்க்கிறேன்'' என்றேன். அதற்கு அவர் '' அடபோங்கள் சார்! நான் முத்தம் கொடுக்கவில்லை முதல் பந்திக்கு வந்தவர்களே அடுத்த பந்திக்கும் வருகின்றனரா என்று மணந்து பார்த்தேன் அவ்வளவு தான்'' என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# பணிப் பெண்களாகச் செல்வோரில் இலங்கையரே அதிகம் பாதிப்பு

## ஆய்வு மூலம் கண்டறிவு

(லண்டன்)

மத்திய கிழக்கு நாடுகள் உட்பட வெளிநாடுகளில் பணிப் பெண்களாக கடமையாற்றச் செல்லும் பெண்களில் இலங்கைப் பெண்களே பெரும் சித்திரவதைக்குட்படுவதாகவும் அவர்களுக்கு முறையாக சம்பளம் கொடுக்கப்படாது அங்கிருந்து திருப்பி அனுப்பப்படுவதாகவும் கொழும்பு பல்கலைக்கழகம் அண்மையில் நடத்திய ஆய்வு மூலமாக கண்டறியப்பட்டுள்ளது.

அவ் ஆய்வு அறிக்கையில் தெற்காசிய நாடுகளில் இலங்கையில் இருந்தே அதிகமான பெண்கள் வெளிநாடுகளிற்குப் பணிப் பெண்களாக அனுப்பப்படுகின்றனர்.

இவர்கள் வெளிநாடுகளில் பணிப் பெண்களாக கடமையாற்றும் போது, வீட்டு உரிமையாளர்களால் அதாவது எஜமானிகளால் பல்வேறு வழிகளில் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் முறையாக இவர்களுக்கு சம்பளப்பணமும் வழங்கப்படுவதில்லை அவ்வாறு சம்பளத்தை உரியவர்களிடம் கேட்கும் போது கம்பிகளால் அடித்தும், நெருப்பினால் சுட்டும் சித்திரவதை செய்வதாக வெளிநாடுகளில் பணிப்பெண்களாகக் கடமையாற்றி விட்டு துன்புறுத்தல்களுடன் நாடு திரும்பியவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், வறுமை நிலை காரணமாகவே வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களாக கடமையாற்றச் செல்வதாகவும், அங்கு தமது வேலைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படவில்லை என்றும்,இது குறித்து வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பல தடவைகள் முறைப்பாடு செய்தும் இதுவரை சம்பந்தப்பட்ட பணியகம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளதாக அந்த ஆய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

பல்வேறு வகையான துன்பங்களை அனுபவித்துக் கொண்டு, தமது குடும்பத்தை காப்பாற்றுவதற்காக பணத்தை சம்பாதித்துக் கொண்டு நாடு திரும்புகையில், தம்மை பிள்ளைகள,பெற்றோர்கள் அடையாளம் காண முடியாது திணறுவதாகவும் உடல் எங்கும் உள்ள அடிகாயங்கள், சூட்டுக் காயங்கள் என்பவற்றைக் கண்டதும் அவர்கள் பெரும் துயர திர்காள்ள் குவதாகவும் கூறுகின்றனர்.

இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் நாடாக இருப்பதால், இங்கு வேலையில்லாப்பிரச்சினை ஓர் பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

ஆனாலும்,தொழில் அமைச்சு இலங்கையில் இருந்து பணியாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும போது அவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யத்தவறி விடுகின்றது என்றும் ஆய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி-62,10)

# மக்கள் ஓரணியில் திரண்டால்தான் எம்மால் எதனையும் சாதிக்கமுடியும்

## கட்டளைத் தளபதி ஜெயம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழ் மக்களாகிய நாம் எமது தலைவர் வழியில் ஒன்று திரண்டு, எமக்கென்று தாயகம் ஒன்றை உருவாக்கவேண்டும். என்ற உணர்வுடன் எல்லோரும் உழைக்க வேண்டும்.

அப்போது தான் நாம் சுதந்திரமாகவும் சுபீட்சத்துடனும் வாழ முடியும் என விடுதலைப்புலிகளின் கட்டளைப்பணியக கட்டளைத் தளபதி ஜெயம் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட மக்கள் வாழ்க்கை குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் மக்களாகிய நாம் ஓரணியில் இணைந்து பலத்துடன் நிற்கும் போது தான் எம்மால் எதையும் சாதிக்கமுடியும்.

எமது தாயகத்தை கட்டி வளர்க்கின்ற பாரிய பொறுப்பு ஒவ்வொரு தமிழ்ப் பிரஜைக்கும் உள்ளது.

இதேவேளை,தற்போதைய சமாதானச் சூழலிலும் கூட மன்னார் மாவட்ட மக்கள் பல்வேறு வசதிக் குறைவினால் பெரும் பாதிப்புற்றுள்ளனர். கல்வி, சுகாதாரம்,போக்குவரத்து போன்ற வசதிகள் மிகவும் அரிதாகவே இங்கு காணப்படுகின்றன.

இதுகுறித்து அரச சார்பற்ற நிறுவனங்களோ, அரசாங்கமோ எதுவித அக்கறையும் காட்டவில்லை.

எனவே மன்னார் மாவட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து உதவுவதற்கு மனிதாபிமான தொண்டு நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்த்தபபட்டு வருகின்றனர்.ஆனால் அவர்களுக்கான அடிப்படைவசதிகள் கூட பூர்த்தி செய்யப்படவில்லலை.

ஆனால் தென்மாகாணத்தின் பல பகுதிகளை அரசு அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு என்ற வகையில் சீரமைத்து வருகிறது.

யுத்தத்தினால் அழிவுகளை எதிர்நோக்கியுள்ள பல பிரதேசங்கள் இன்னமும் புனரமைப்புச் செய்யப்படாது உள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (தி-64,10)

## இராசி பலன்

**08.12. 2003**

**(கார்த்திகை 22,திங்கள்)**

**பூரணை பி.இ.2.18 வரை**

**ரோகிணி பி.இ.4.27 வரை**

**இராகுகாலம் 7.47-9.17**

**சுபநேரம் 12.17-1.47**

**பூரணை விரதம்,கார்த்திகை விளக்கீடு, கார்த்திகைத் திங்கள்**

**மேடம்**
மதிப்புக் குறைவு, அதிக பிரயாசை, மாதர்நட்பு, காரிய தாமதம்.

**இடபம்**
ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், தர்மம் செய்தல், நண்பர்கள் உதவி.

**மிதுனம்**
பிதாசிந்தை, கோபப்படுதல், பண விரயம், பிரயாணம்.

**கடகம்**
தெய்வதரிசனம், குதூகலம், போசன நன்மை, அதிகாரம்.

**சிங்கம்**
சுபநிகழ்வு, உற்சாகம், காரிய அனுகூலம், பிறரது உதவி.

**கன்னி**
ஆன்றோரால் மதிக்கப்படுதல், புதிய திட்டமில், ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம்.

**துலாம்**
விருந்துபசாரம், வீண்தொல்லை, வேலைக்கஷ்டம், எதிர்பாராத நன்மை.

**விருச்சிகம்**
திடீர் பயணம், அபு,ர்வசந்திப்பு, பண வரவு, வாக்கு மேன்மை.

**தனுசு**
சத்துரு ஜெயம், ஜனவசியம், பிரயாண நன்மை, செய்தொழில் விருத்தி.

**மகரம்**
வியாபார நன்மை, காரிய இடையு,று, சயன சுகம், பெரியோர் உதவி.

**கும்பம்**
ரோகபயம், புதிய திருப்பம், பாராட்டு, முயற்சி தாமதம்.

**மீனம்**
இனிய அனுபவம், வாக்கு மேன்மை, தனவரவு, நல்ல முயற்சி.

(பழையநேரப்படிகணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# ஸ்ரீ.மு.கா.யோசனைகள் மாத இறுதியில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண இடைக் கால நிர்வாகசபை தொடர்பான முஸ்லிம் காங்கிரஸின் யோசனைகள் இம் மாத இறுதிக்குள் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும் என்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் நாடு திரும்பிய ஹக்கீம், முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பிக்கவுள்ள இடைக் கால நிர்வாகசபை தொடர்பான யோசனைகள் பற்றி மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்குக்கான இடைக் கால நிர்வாகசபை தொடர்பான எமது யோசனைகளை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் சமர்ப்பிப்பதற்கு எமது இந்திய விஜயம் பெரிதும் துணை புரிந்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசில் அங்கம் வகித்தாலும், முஸ்லிம் மக்கள் பிரச்சினைகளுக்கு ஆளாகும் போதும் அதனை நாம் வெறுமனே பார்த்துக்கொண்டு இருக்க முடியாது.

திருகோணமலை கிண்ணியாப் பிரதேசங்களில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களுக்கு மூன்றாம் தரப்பினரே காரணம் என்று பொறுப்பற்ற கருத்துக்களை முன்வைத்ததாலேயே அரசாங்கத்தை நாம் குற்றம் சாட்டினோம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## முழுநிலா துறைசார் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரம்ம குமாரிகள் இராஜ யோக நிலையத்தினர் வழங்கிவரும் மாதாந்த முழுநிலா துறைசார் கருத்தரங்கில் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் ''கணக்கியல் துறை'' எனும் விடயம் குறித்து கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

இளைப்பாறிய கணக்காளர் பிரம்ம குமார் இரங்கநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள கருத்தரங்கில் இலங்கை வங்கி உதவி முகாமையாளர் என். சச்சிதானந்தன், யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ரதிராணி யோகேந்திர ராஜா மற்றும் அகில இலங்கை சைவக கழக அமைப்பாளரும், கல்வித் திணைக்கள உத்தியோகத்தருமான சைவ பிதா பொன். சாம்பசிவம் ஐயா ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (உ-18)

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் – குறள்

வலம்புரி

## இந்தியா செவி சாய்க்குமா?

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா அக்கறை கொண்டிருக்குமாயின், ஈழத்தமிழர்களுடன் இந்தியா தனது நல்லுறவை மீளக்கட்டி எழுப்பவேண்டும். இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கம் லண்டனில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கை இன விவகாரத்தில் இந்தியா அக்கறை கொண்டிருக்குமாயின் இந்தியா தமிழ் மக்களுடன் நல்லுறவை ஏற்படுத்த வேண்டுமெனக்கூறிய அன்ரன்பாலசிங்கம், பழைய பகைமைகளை மறந்து இந்தியா செயற்படுவதோடு, இந்தியாவின் பாதுகாப்பு, இறைமை பொருளாதாரம் என்பவற்றுக்குத் தீங்கிழைக்கும் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் ஈடுபடமாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

அன்ரன் பாலசிங்கம் வழங்கிய இவ் உத்தரவாதத்தை இந்திய அரசு மிக உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். அண்டை நாடான இந்தியா தனது பிராந்தியத்தில் உள்ள ஒரு நாட்டில் நிலவும் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் தார்மீகக் கடமையை கொண்டுள்ளது. அதிலிருந்து அந்நாடு விலகிக் கொள்ளுமாயின், வெளிநாடுகளின் ஆதிக்கம் இலங்கைக்குள் ஊடுருவுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இத்தகையதோர் நிலைமை ஏற்படுமாக இருந்தால், அது இந்தியாவின் பாதுகாப்பிற்கும், இறைமைக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்பதில இருவேறு கருத்துக்கு இடமிருக்க முடியாது. விடுதலைப் புலிகளை பகைமை உணர்வோடு நோக்குகின்ற இந்தியா, இலங்கை அரசுகளின் கடந்தகால நடவடிக்கைகள் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாதிருப்பது அதிசயமாகவே உள்ளது.

பொதுவாக, இலங்கையின கடந்தகால சிங்கள ஆட்சியாளர்கள் இந்தியாவுடன் நல்லுறவைக் கொண்டிருக்க விரும்பவில்லை. ஆக, தமது தேவை கருதிய உறவை மட்டுமே இலங்கை ஏற்படுத்தியிருந்தது. இதன் ஒரு வெளிப்பாடாகவே இன்றும் இலங்கையரசு அமெரிக்காவுடன் தனது நல்லுறவை வலுப்படுத்துவதில் ஆர்வங் காட்டி வருகின்றது.

இதனை அன்ரன் பாலசிங்கம் சுட்டிக்காட்டியுள்ளதுடன், நீண்டகால நட்பைக் கொண்டிருந்த தமிழ் மக்களுடன் இந்திய அரசு மீண்டும் தனது ஆதரவைக் காட்ட முன்வர வேண்டும் என்றும் கோரியுள்ளார்.


கடந்த இருபது வருடகாலமாக நீடித்து வரும் இன விவகாரத்துக்கு தீர்வைக் காணும் முயற்சிக்கு முட்டுக் கட்டை போடும் தென்னிலங்கை அரசியல் தலைமைகள், ஒருபோதும் தாங்களாக உணர்ந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப் போவதில்லை. அவர்களுக்கு சர்வதேசத்தின் அழுத்தம் தேவைப்படுகிறது. இதனை வழங்க இந்தியா முன்வர வேண்டும்.

# நிரந்தர சமாதான நோக்குடனேயே புலிகளுடன் நான் பேச்சுக்களை ஆரம்பித்தேன்

## பிரதமர் ரணில் புத்தள மக்கள் மத்தியில் உரை

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானம் ஒன்று ஏற்படவேண்டும் என்பதற்கா



கவே கடந்தகால பேதங்களை மறந்து தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தேன்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புத்தளம் ரிதிகம பிரதேசத்தல் ஹேவாவிஸ்தவில் நேற்று இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்திற்கும்-தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் காரணமாக மக்கள் மத்தியில் பெரும் சமாதான நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம்களால் கையளிக்கப்பட்ட பிரேரணைகள் அடுத்த சுற்று சமாதானப் பேச்சு வார்த்தைகளின் போது, கலந்துரையாடல்களுக்கென சமர்ப்பிக்கப்படவுள்ளன.

அத்துடன் இடைக்கால நிர்வாக சபை குறித்த அரசாங்கத்தின் பிரேரணைகளும் ஏற்கனவே தயாரிக்கப் பட்டுள்ளன.

எனவே யுத்தம் ஒன்று மீண்டும் ஏற்படாதிருக்க அனைவரும் ஐக்கியதேசிய முன்னணி அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும்.

மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து தற்போது ஜனாதிபதியுடன் பேசி வருகின்ற போதும் முக்கிய அமைச்சுக்கள் ஜனாதிபதி வசம் இருப்பதால், சமாதானப் பேச்சுவார்த்தையினை ஆரம்பிப்பதற்கு கடினமாக இருக்கின்றது.

மீண்டும் நாட்டில் போர் ஏற்படும் ஆயின் நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்படுவதுடன், சர்வதேச சமூகத்தின் நன்மதிப்பையும் உதவியையும் நாம் இழந்து விடுவோம் என்பதை அனைத்து மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகிய பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள மக்கள் அச்சம் எதுவுமில்லாமல் நிம்மதியுடன் வாழ்கின்றார்கள். ஆனால் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் என்பதே அவர்களின் அபிலாஷை.

இவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற நாம் கூடுதலான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

ஆனால் இதனைப் புரிந்து கொள்ளாத சில அரசியல் கட்சிகள் தமிழ் மக்களுக்கு நான் நாட்டை தாரை வார்த்துக் கொடுப்பதாகக் குற்றம் சுமத்தி வருகின்றன.

இத்தகைய அரசியல் கட்சிகளின் கருத்துக்களையும், அறிக்கைகளையும் நினைத்து நான் கவலை அடைகிறேன்.

இனவாதக் போக்குடைய சில அரசியல் சக்திகளின் தூண்டுதலின் பேரிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி,

மக்கள் தொடர்பாடல், பாதுகாப்பு மற்றும் உள்துறை அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுள்ளார். தற்போது இதற்கான பலாபலன்களையும் அனுபவித்து வருகிறார்.

ஜனாதிபதியின் இவ்வாறான செயல்களினால் நாட்டிற்கு கிடைக்கவிருந்த கோடிக்கணக்கான நிதி உதவிகள் மற்றும் கடன் உதவிகள் என்பன கைநழுவிப் போகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-61,10)

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரின் குற்றச்சாட்டு யுனிசெவ்வால் நிராகரிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொள்ளும் சிறுவர்களை மீட்டு அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கிறோம். அல்லது கிளிநொச்சியில் உள்ள இடைத்தங்கல் முகாமில் தங்க வைத்து வருகின்றோம் என்றும் யுனிசெவ் நிறுவனம் விளக்கமளித்துள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன், ''யுனிசெவ்'' நிறுவனம் புலிகள் இயக்கத்தில் இணைய விரும்பும் சிறுவர்களை மீண்டும் புலிகளின் முகவர் நிலையங்களில் ஒப்படைப்பதாக நேற்று ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்திருந்த குற்றச்சாட்டை நிராகரித்தே இந்த விளக்கத்தை மேற்படி நிறுவனம் விடுத்துள்ளது.

இதுபற்றி யுனிசெவ் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

புலிகள் இயக்கத்தில் இணைய வரும் சிறுவர்களை கிளிநொச்சி இடைத்தங்கல் முகாமில் தங்க வைத்து பெற்றோர்களிடம் ஒப்படைப்போம் அலலது அவர் ஏதாவது தொழில் பயிற்சியை பெறவிரும்பினால் அதில் இணைத்துக் கொள்வோம்.

மேற்படி கிளிநொச்சியில் உள்ள இடைததங்கல் முகாமை எமது நிறுவனமும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து நிர்வகித்து வருகின்றன.

தமிழர் புனர்வாழ்வுககழகம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்த போதிலும் எந்தவித அரசியல் நடவடிக்கையிலும் அக் கழகம் ஈடுபடுவது கிடையாது.

அத்துடன் இச்சிறுவர்களை பெற்றோர்களிடம் ஒப்படைத்த பின்னரும் யுனிசெவ் நிறுவனம் அவர்களின் நடவடிக்கைகள் குறித்து கண்காணித்து வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-60,10)

# அடுத்த 3 ஆண்டுகளுக்குள் 45 நிறுவனங்கள் தனியார் மயம்

(கொழும்பு)

அடுத்த 3வருட காலப் பகுதிக்குள் 45அரச நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தும் திட்டத்திற்கு உட்படுத்தப்படவுள்ளதாக அரச கைத்தொழில் மறுசீரமைப்பு ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய மேற்படி 45அரச நிறுவனங்கள் குறித்த அமைச்சுக்களின் அறிக்கை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

இதவேளை, 4அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த அரசாங்கம் அனுமதி வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச பொறியிலாளர் கூட்டுத்தாபனம வரையறுக்கப்பட்ட ஹாஹட்டஹா லங்கா நிறுவனம், அரச மரக்கூட்டுத்தாபனம், தேசிய கால் நடைச் சபை ஆகியவை உட்பட 45 நிறுவனங்களே இவ்வாறு தனியார் மயப் படுத்துவதற்கு அரசின் அனுமதியைப் பெற்றுள்ளது. (தி-61.10)

# களனிப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே மோதல் 4 பேர் காயம்

(கொழும்பு)

களனிப் பல்கலைக்கழகத்தில் நேற்று அதிகாலை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதன்போது 4 மாணவர்கள் காயமடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போது சிகிச்சைபெற்று வருகின்றனர்.

முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்பதற்காக ஒழுங்கு செய்யப்பட் விழாவில் இரு மாணவக் குழுக்கள் இடையே இடம் பெற்ற வாயத்தார்க்கமே பின்னர் மோதலாக மாறியதாகத் தெரிய வருகிறது.

இம் மோதல் சம்பவத்தின் போது மேற்படி பல்கலைக்கழகத்தின் கட்டடங்கள் விடுதி மற்றும் கணனிக் கூடங்கள் மாணவர் சங்கத்தின் அலுவலகம் என்பன சேதமாக்கப்பட்டுள்ளன.

இது குறித்து விடுதிப் பொறியியலாளர்களும், பொலிஸ் அதிகாரிகளும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (தி-61)

# முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ள கிண்ணியா மற்றும் மூதூர்ப் பிரதேசங்களுக்கான பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியிலும் முப்படைகளின் தளபதி என்ற ரீதியிலும் இது தொடர்பான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று பிரதி வீடமைப்பு அமைச்சர் வசீர்சேகுதாவுத் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் லேதௌபிக் மற்றும் எம்.ம.ாறுப் ஆகிய மூவரும் இணைந்து ஜனாதிபதியிடம் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

அத்துடன் அப்பிரதேசங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தி, முஸ்லிம் மக்களின் மனக்குறைகளை நிறைவு செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (தி-61)

## தினசரி தியானம்

ௐ

# மனம்

மனம் ஆத்மசக்தியாகும். இதுதான் ஜீவாத்மனுக்கும் பரமாத்மனுக்கும் உள்ள தடுப்புச் சுவராகும். மனம் இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கிறது. இதுதான் எண்ணம் நுகர்ச்சி ஆகியவற்றின் தத்துவம். இது வாசனைகள், எண்ணங்கள், விருப்புக்கள், வெறுப்புகள் ஆகியவை அடங்கிய ஒரு தொகுப்பாகும். மனத்தை, வாசனைகளை அழிப்பதன் மூலமாகவும் பிரம்ம விசாரத்தின் மூலமாகவும் ஆத்மானுபூதியடையலாம்.

சுவாமி சிவானந்தர்

## அடுத்த ஆண்டு ஜனவரி முதல்

# தேர்தல் தொகுதி தோறும் கூரைத்தகடு வழங்கப்படும்

(கொழும்பு)

சகல தேர்தல் தொகுதிகளிலும் உள்ள சுமார் ஆயிரம் வீடுகளுக்கு இலவச கூரைத்தகடுகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்திய நிறுவனம் ஒன்றின் கடனுதவித்திட்டத்தின் கீழ் இந்த இலவசக் கூரைத்தகடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் 200கோடி ரூபா பெறுமதியான 37இலட்சம் கூரைத்தகடுகளை இம்மாத இறுதிக்குள் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யபட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் அடுத்த ஆண்டின் முதல் 4மாதங்களிலும் சுமார் ஒரு இலட்சத்து 30ஆயிரம் குடும்பங்களுக்கு இலவச கூரைத் தகடுகளை வழங்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். (தி-61)

## கூட்டம்

(தொல்புரம்)

வலி - மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கான கூட்டமொன்று எதிர் வரும் 10ஆம் திகதி புதன்கிழமை மு.ப10.30க்கு பிரதேச செயலர் சி. ஏ.மோகன்ராஸ் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (தி-70)

# நீதித்துறையில் ஜனாதிபதி தலையீடு
## ஆசிய மனித உரிமை ஆணைக்குழு விசனம்

(கொழும்பு)

பிரதமர் நீதியரசர் சரத் என் சில்வாவிற்கெதிரான அரசியல் குற்றச்சாட்டு பிரேரணையை கைவிடும்படி ஜனாதிபதி கேட்டுள்ளமையானது சிரேஷ்ட நீதித்துறை அதிகாரிகள் மீதான ஒழுக்கக்கட்டுப்பாட்டு நடைமுறைகளை மோசமாக பாதிக்கமுடியும் என்று ஆசிய மனிதவுரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இவ்விவகாரத்தை சாதாரண அரசியல் சமரசம் ஒன்றாகத் தரமிறக்கியுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

சரத் என். சில்வாவிற்கெதிரான அரசியற் குற்றச்சாட்டு பிரேரணை 100 எம்.பிக்களின் ஒப்பத்துடன் பாராளுமன்றத்தில் உள்ளது. ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்குமிடையேயான அரசியல் நெருக்கடியை தீர்த்துவைப்பதற்கான பிரேரணைகளில் ஒன்றாக இதுவும் ஜனாதிபதி தரப்பினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் விவகாரத்தை அவர் மீதான குற்றச்சாட்டுகள் எத்தகையதாயினும் பாராளுமன்றம் முடிவு செய்யவேண்டும் என்பது அரசியல் சட்ட நடை முறையாகவுள்ளது. இவ்வாறிருக்க இரு தரப்பினருக்குமிடையேயான அரசியல் நெருக்கடியை தீர்த்துவைப்பதற்கு பிரதம நீதியரசர் மீதான அரசியல் குற்றச்சாட்டை நீக்கவேண்டுமென பிரேரணை முன்வைக்கப்பட்டிருக்கிறது. நீதித்துறையின் சுயாதீனம் இலங்கை அரசியல் அமைப்பின் ஒருஅம்சமென நம்பியிருக்கும் எவருக்கும் இதுமனச்சோர்வை ஏற்படுத்தும் செயலாகும். இவ்வாறு ஆசிய மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நீதித்துறை தொடர்பான விவகாரம் அரசியலிலிருந்து தனிமைப்படுத்தப்பட வேண்டும். உயர் நீதித்துறை அலுவலர் ஒருவருக்கு எதிராக தவறான நடத்தை தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பின் அது தொடர்பாக விரைந்து செயற்படவேண்டியது பாராளுமன்றத்தின் பணியாகும். அரசியற் குற்றச்சாட்டானது இருதரப்பினர்களுக்கு மிடையிலான அரசியல் சமரசம் ஒன்றினால் கைவிடப்படுமாயின் குற்றச்சாட்டின் உண்மை நிலை பற்றி மக்கள் அறிந்து கொள்ள வாய்ப்பில்லாது போய்விடும் இவ்வாறு அவ் ஆணைக்கு தெரிவித்துள்ளது(ந-6)

# அடுத்த ஆண்டு தொடக்கத்தில் வடமராட்சி கிழக்கிற்கு மின்சாரம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு பகுதியின் சில இடங்களுக்கு அடுத்த ஆண்டு தொடக்கத்தில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கில் உள்ள மணற்காடு குடத்தனை மற்றும் அரச கட்டுப்பாடற்ற பகுதியில் மருதங்கேணி சந்தி வரையான பகுதி ஆகியவற்றுக்கு மின்சாரம் வழங்குவதற்குரிய அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதையடுத்து, இதற்கான முதற்கட்ட பணியாக கொடிகாமம் சந்தியிலிருந்து பளை வரையான பகுதிகளுக்கு மின் இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வேலைகள் அனைத்தும் எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் முடிவுற்றதும் உடனடியாக அப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கும் மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (43)

## கருத்தரங்கும் தகவல் திரட்டலும்

(தொல்புரம்)

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும் சிறுவர் நலத்திட்டம் சம்பந்தமான கருத்தரங்கும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான தகவல் திரட்டலும் வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள அனைத்துப் பாடசாலை அதிபர்களுடாகவும் பெறப்படவுள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 11 மணிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதால் அதிபர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுள்ளனர். (தி-70)

# பாதைப் படகுச்சேவை இடைநிறுத்தம்

(காரைநகர்)

காரைநகர்- ஊர்காவற்றுறை பாதைப் படகுச்சேவை யந்திரக் கோளாறு காரணமாக இடைநிறுத் தப்பட்டுள்ளது.

இதனால் ஊர்காவற்றுறைப்பகுதிக்கு செல்லும் பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் வியாபாரிகள் நீதிமன்றம், பொலிஸ் நிலையம் எனச் செல்லும் பெருமளவு பயணிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த காலத்தில் காரைநகர் கடற்படையினரின் பொறுப்பில் இயங்கிவந்த பாதைப்படகுச் சேவை கடந்த வாரமே வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்டது. (தி-246)

### சம்பந்தன் எம்.பி...

புரிந்துணர்வுடனும் செயற்படுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஈச்சம் தீவுக் கிராமத்தில் இடம் பெயர்ந்திருக்கும் பொது மக்களையும் சம்பந்தன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இவருடன் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான க.துரைரட்ணசிங்கமும் பிரசன்னமாகியிருந்தார். (ந-5)

### வான்தோண்டும்...

படையணித் தலைமையகம் வழங்கியது.

ஆயினும், பல தடைவைகள் இவ் வான்தோண்டும் பணிகளை மேற்கொள்வதற்குப் படைத்தரப்பினரிடம் அனுமதியைக் கோரியிருந்த போதிலும், தற்போதே அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தற்போதைய வான் தோண்டுவதில் உள்ள சிரமங்கள் மற்றும் படையினர் தமது சுய இலாபம் கருதி இப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை ஆகிய காரணங்களுக்காக கடந்த சனியன்று வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசம் வன்மையாக கண்டனம் வெளியிட்டிருந்தது.

இதையடுத்து, நேற்றைய தினம் வடமராட்சி பகுதியில் இன்பருட்டி மற்றும் சுப்பர்மடம் ஆகிய இடங்களில் வான்தோண்டும் பணிகளில் படையினர் மாத்திரம் ஈடுபட்டு வருவதுடன், கடற்றொழிலாளர்களோ அன்றி பொதுமக்களோ அப்பணிகளில் ஈடுபடாமல் இருப்பதாக தெரியவருகிறது. (தி-43)

### பொதுத் தேர்தலை...

பாராட்டுக்குரியது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முறைகளை இனம்காணவும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் இக்குழு உதவமுடியும்.

இந்நிலையில் இரு தலைவர்களுக்குமிடையிலான ஒருமைபாடு ஏற்படாத பட்சத்தில் பொது தேர்தல் ஒன்றை நாடு எதிர்நோக்க வேண்டி ஏற்படும். இதனை மக்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள் அத்துடன் இவ்வாறான தேர்தல் ஒன்று பிரச்சினைகளை ஒருபோதும் தீர்த்து வைக்கமாட்டாது அரசியல் சீர்திருத்தங்களின் மூலம் ஜனநாயக நடைமுறைகளை வலுப்படுத்த கூட்டு முயற்சிக்கு ஜனாதிபதியும் பிரதமரும் இணங்கி வரவேண்டும்.

அதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கான அரசியல் அமைப்பு, சமஷ்டிமுறையிலானதாக இருக்க வேண்டும் என்றும் தேசிய சமாதான மன்றம் இரு தலைவர்களையும் வலியுறுத்திக் கேட்டுள்ளது. (ம)


சொலெக்ஸ் மூக்குக் கண்ணாடியகம்




ஆம்;
தற்பொழுது யாழ். ஆஸ்பத்திரி வீதியில் (O.P.D முன்பாக) நவீன காட்சிஅறையுடன் தமது சேவையை ஆரம்பித்துள்ளார்கள்

- கண்பரிசோதித்து நவீன பிறேம்களில் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளல்
- காலநிலைக்கு ஏற்ப கலர் மாறக் கூடிய சன்கிளாஸ் வகைகளை நியாய விலையில்பெற்றுக் கொள்ளல்
- அதி சிறந்த வகையான சங்குப் பற்களை கட்டிக் கொள்ளவும் மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும்

உங்கள் தெரிவு
சொலெக்ஸ் மூக்குக் கண்ணாடியகம்

FREE EYE TESTING

கிளை:-
232/A கண்டி வீதி,
சாவகச்சேரி

516, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D முன்பாக)
யாழ்ப்பாணம்
0777 -855328

(சி-6550)



தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள்
விடைகளுடன் விற்பனையாகின்றது

பூபாலசிங்கம் யாழ்ப்பாணம் துர்க்கா சுன்னாகம்
மொடேண் ஸ்ரோர்ஸ் நெல்லியடி பிரியங்கா உடுப்பிட்டி
துர்க்கையம்மாள் சாவகச்சேரி நாவலர் மந்திகை
சுந்தர் வெளியீடு 844,ஆஸ்பத்திரி வீதி யாழ் ☎021.222 7086


# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரிஇராசையா

இல. 36/1 ஆடியபாதவீதி நல்லூரைச் சேர்ந்த சின்னப்பிள்ளை என்று அழைக்கப்படும் திருமதி மகேஸ்வரி இராசையா 7.12.2003 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இரத்தினசபாபதி மற்றும் திருமதி இராசாபவளம் ஆகியோரின் சகோதரியும், திருமதி கலையரசியின் (சங்கீத ஆசிரியர் நல்லூர் ஸ்தான பாடசாலை) தாயாரும், திரு.ப.சிவகுமாரின் (ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்) மாமியும், திருமதி தர்சினி கண்ணன்(பிரான்ஸ்), கரன்(பிரான்ஸ்), தீபன்(பிரான்ஸ்) கௌதமன், ஆரணி ஆகியோரின் பேர்த்தியும்,

மீரன்(பிரான்ஸ்),மிதுனன்(பிரான்ஸ்), மயூரா(பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.12.2003 இன்று திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ப.சிவகுமார் (மருமகன்)

(சி-6971)

விழி நீர் சொரிந்து நிற்கும் இரண்டாம் ஆண்டில்
உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்

அமரர்

# கந்தையா பன்னிருகரம்

(முன்னாள் உரிமையாளர் நியு, கௌரி மிதிவண்டி வாணிபம் நெல்லியடி)

(திதி - 08.12.2003)



உயிர்ப்பு 1944 - 01 - 15
சங்கமம் 2001 - 11 - 30

உணர்வுகள்
ஊமையாய்ஊருகின்றன
நினைவுகள்
உங்களைச் சுற்றியே
நித்தமும்
சிறகடிக்கின்றன
உங்கள் சுவடுகள்
இந்த மண்ணில்
அழிந்து போனாலும்
எங்கள்
உயிருள்ளவரை
உங்கள் நினைவுகள்
மூச்சோடு

கலந்திருக்கும்
உங்கள் இலட்சியங்களை
உங்கள் கனவுகளை நிறைவேற்றி
வைப்போம் அப்பா

''சாந்தி பவனம்''
கொற்றாவத்தை,
கரவெட்டி

- குடும்பத்தினர்

(8007)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.12.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.